www.tamilarangam.net

Note. [illegible] Photo copy [illegible]

# மாசேதுங்கும் மூன்றுலகக் கோட்பாடும்

## முன்னுரை

1982 இல் நடைபெற்ற சீனப் பொதுவுடைமைக் கட்சியின் 12 ஆவது பேரவையானது (காங்கிரஸ்) பண்பாட்டுப் புரட்சியை வெளிப்படையாகக் கண்டனம் செய்து மாவோவின் அடிப்படைக் கோட்பாடுகள் அனைத்தையும் மறுதலித்த பிறகு, இந்தியா உள்பட உலக நாடுகளிலுள்ள மார்க்சிய-லெனினிய அமைப்புகள் எனக் கூறப்படும் பல அமைப்புகள் தற்போதைய சீனத் தலைமையிலுள்ளவர்கள் புரட்டர்கள் என்று தயக்கத்துடன் திறனாய்வு செய்யத் தொடங்கியுள்ளனர். ஆனால் இந்த அமைப்புகள் பல மூன்றுலகக் கோட்பாடு என்பதனை இன்னும் பிடித்துக்கொண்டுள்ளன; இக்கோட்பாடு மாவோவினால் முதன் முதலாக முன்வைக்கப்பட்டது என்றும் சர்வதேசப் பாட்டாளிவர்க்கத்துக்கான புரட்சிப் பாதையினை அது பிரதிநிதித்துவம் செய்கிறது என்றும் இந்த அமைப்புகள் காரணம் கூறுகின்றன. அப்படிப்பட்ட அமைப்புகள், குறிப்பாக இந்தியாவில், அணிகளிடையே மூன்றுலகக் கோட்பாட்டின் உண்மையான தன்மை பற்றியும் மாவோவுக்கும் அதற்குமுள்ள தொடர்பு பற்றியும் குழப்பம் விளைவித்து வருவது சாத்தியமாகியுள்ளது; இச்சூழலில் இதுபற்றி ஆழமாக ஆய்வுசெய்து மூன்றுலகக் கோட்பாட்டின் எதிர்ப்புரட்சித் தன்மையினை அம்பலப்படுத்துவது எல்லா உண்மையான மார்க்சிய-லெனினியர்களின் கடமையாகிறது.

துவக்கத்தில், அதாவது மாவோ மறைந்து சீனத்தில் வலது சாரியினர் தலைமையைக் கைப்பற்றிக்கொண்ட பின், அல்பேனியத் தொழிலாளர் கட்சி, மூன்றுலகக் கோட்பாட்டினை உருவாக்கியவர் மாசேதுங்தான் என்றும் மூன்றுலகக் கோட்பாட்டுடன் மாவோவின் சிந்தனைகளுமே ஒதுக்கித் தள்ளப்பட வேண்டியவைதான் என்றும் ஒரு வஞ்சகத்தனமான நிலைப்பாட்டினை மேற்கொண்டது; உண்மையில் அல்பேனியக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கட்சியின் நிலைப்பாடு, மூன்றுலகக் கோட்பாடு மாவோவால் தோற்றுவிக்கப்பட்டதால் அது உயர்த்துப் பிடிக்கப்பட வேண்டும் என்ற ஹூவா-டெங் மார்க்கத்திற்குப் பெரிதும் உதவியது. எவ்வாறாயினும் மெய்நிலையில் இவ்விரு நிலைப்பாடு களும் ஒன்றுக்கொன்று எதிரான கோணத்திலிருந்து தோன்றி யிருப்பினும் மார்க்சிய-லெனினிய—மாசேதுங் சிந்தனை என்ப தன் சாரத்தைத் தாக்கவே செய்கின்றன. மேலோட்டமாகப் பார்த்தால், உலகை மூன்றாகப் பிரித்தல் என்பது, அதாவது இரண்டு வல்லரசுகள் அடங்கிய முதல் உலகம்; மீதமுள்ள ஏகாதிபத்திய மற்றும் முதலாளிய நாடுகள் அடங்கிய இரண்டா வது உலகம்; எல்லாக் காலனி, அரைக்காலனி நாடுகளையும் உள்ளடக்கிய மூன்றாவது உலகம் எனப் பிரிப்பதுதான்— மூன்றுலகக் கோட்பாடு எனக்கருதலாம். ஆனால் உண்மை என்னவென்றால் மாவோ உலகை மூன்றாக வகைப்படுத்தியதும் தற்போதைய தலைமை முன்வைத்துள்ள 'மூன்றுலகக் கோட் பாட்'டின் சாரமும் அடிப்படையில் வெவ்வேறானவையாகும். மாவோ, உலகை மூன்றாக வகைப்படுத்தியது, ஒரு சோசலிச நாட்டின் வெளியுறவுக் கொள்கையின் ஒரு கூறுக்கு மட்டுமே பொருந்துவதாகும்; அதாவது பல்வேறு சமூக அமைப்பு களுடைய நாடுகளுக்கிடையேயான உறவுகளைக் கையாள்வதே இக்கூறு. இதற்கு மாறாக, டெங்கின் மூன்றுலகக் கோட்பாடு சர்வதேசியப் பாட்டாளிவர்க்கத்தின் போர்த்தந்திரமாக (Strategy) உருவாக்கப்பட்டுள்ளது. முதல் உலகத்துக்கு எதிராக - இறுதியில் சோவியத் யூனியன் என்ற ஒரு வல்லரசுக்கு எதிராக - மூன்றாம், இரண்டாம் உலக நாடுகள் அனைத்திலும் அரசு மட்டத்தில் ஓர் ஐக்கிய முன்னணியை உருவாக்குதல் என்பதே இதன் சாரமாகும்; நாடுகளுக்கிடையே அரசு மட்டத்தில் மட்டுமே உருவாக்கப்படக் கூடிய இந்த உலக ஐக்கிய முன்ன ணியை உருவாக்குதல் என்ற பெயரில் இந்த நாடுகள் அனைத் திலும் வர்க்கப் போராட்டத்தை நிராகரிப்பதுதான் இந்தப் போர்த்தந்திரத்திலுள்ள மிக முக்கியமான கூறாகும். எனவே இது அப்பட்டமான வர்க்க ஒத்துழைப்புத் தன்மையுள்ளதும் உலகிலுள்ள ஏகாதிபத்தியவாதிகளுக்கும் பிற்போக்குவாதி களுக்கும் சேவை புரியக்கூடியதுமாகும்.

கீழ்க்காணும் பகுதிகளில், மாவோ எவ்வாறு உலகை மூன்றாக வகைப்படுத்தினார் என்பதையும், டெங்கின் 'மூன் றுலகக் கோட்பாடு' என்பது எவ்வாறு பிற்போக்குத் தன்மை யைப் பெற்றுள்ளது என்பதையும் நாம் பார்ப்போம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## 1. சர்வதேசப் பொதுவுடைமை இயக்கத்தின் பொது மார்க்கம்

மூன்றுலகக் கோட்பாடு குறித்த தற்போதைய சித்தாந்தப் போராட்டத்தில் எழுப்பப்பட்ட அடிப்படைப் பிரச்சனைகளில் பெரும்பாலானவை 1960 களில் - நடைபெற்ற சித்தாந்தப் போராட்டத்திலேயே விவாதிக்கப்பட்டவைதான். சர்வதேசப் பொதுவுடைமை இயக்கத்தின் பொதுமார்க்கம் என்று குருச்சேவும் அவனது ஆதரவாளர்களும் அறிமுகப்படுத்த முயற்சிசெய்த எதிர்ப்புரட்சிக் கருத்துகளுக்கு மாசேதுங்கும் சீனப் பொதுவுடைமைக் கட்சியும் அளித்த பதில் தற்போதைய சித்தாந்தப் போராட்டத்தில் மார்க்சிய - லெனினியர்களுக்கு மிக மதிப்பு வாய்ந்த உதவி செய்கிறது. குருச்சேவின் புரட்டல் கொள்கையினை அம்பலப்படுத்த மாவோ அன்று பயன்படுத்திய அதே ஆயுதங்கள் தற்போதைய சீன, அல்பேனியப் புரட்டர்களின் எதிர்ப்புரட்சி நிலைப்பாட்டை அம்பலப்படுத்தவும் முறியடிக்கவும் நமக்கு உதவிகரமானதாய் உள்ளன. எனவே, எவ்வாறு மாவோவும் சீனப் பொதுவுடைமைக் கட்சியும் 1960 களில் சர்வதேசப் பொதுவுடைமை இயக்கத்திற்குத் தாம் வரைந்து தந்த பொதுமார்க்கத்தை உயர்த்துப் பிடித்தனர் என்பதையும் குருச்சேவின் புரட்டல் கொள்கை எவ்வாறு அம்பலப்படுத்தப்பட்டது என்பதையும் மிகச் சரியாகப் புரிந்துகொள்வது இன்றியமையாததாகிறது. அப்போது தான் இப்போதுள்ள பிரச்சனைகளுக்குச் சரியான விடைகளைக் கண்டுபிடிக்க முடியும்.

1956 இல் நடந்த சோவியத் பொதுவுடைமைக் கட்சியின் 20 ஆவது பேரவைதொட்டு குருச்சேவ், ஒரு சோசலிச அரசின் வெளியுறவுக் கொள்கையின் பகுதி என்று லெனின் தம் காலத்தில் முன்வைத்த 'சமாதான சகவாழ்வு' என்ற கொள்கையினை, சர்வதேசப் பொதுவுடைமை இயக்கத்தின் பொதுமார்க்கமாக மாற்ற முயற்சி செய்துவந்தான். அக்காலந்தொட்டே சீனப் பொதுவுடைமைக் கட்சியானது இந்த எதிர்ப்புரட்சிப் போக்குக்கு எதிரான சித்தாந்தப் போராட்டங்களை நடத்தி வந்துள்ளது. 1960 களில் சீனப் பொதுவுடைமைக் கட்சிக்கும் சோவியத் பொதுவுடைமைக் கட்சிக்குமிடையே நடந்த வெளிப்படையான சித்தாந்தப் போராட்டங்களில் இப்பிரச்சனைகள் அனைத்தும் எழுப்பப்பட்டன. "சர்வதேசப் பொதுவுடைமை இயக்கத்தின் பொதுமார்க்கம் குறித்த ஓர் ஆலோசனை" (ஜூன் 14, 1963) என்ற பெயரில் சீனப் பொதுவுடைமைக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கட்சியின் மத்தியக்குழு, சோவியத் பொதுவுடைமைக் கட்சியின் மத்தியக் குழுவிற்கு அனுப்பிய பதிலில் குருச்சேவின் புரட்டல் வாத நிலைப்பாடுகள்மீது மார்க்சிய - லெனினியர்கள் மேற் கொள்ள வேண்டிய சரியான அணுகுமுறை விரிவாகச் சொல்லப் பட்டுள்ளது. அன்று சீனப் பொதுவுடைமைக் கட்சி முன்வைத்த அடிப்படையான கோட்பாடுகள்மீது உறுதியாகச் சார்ந்து நிற்பதன் மூலம்தான் - மார்க்சிய - லெனினியர்கள் இன்றைய சித்தாந்தப் போராட்டத்தில் சரியான நிலைப்பாடுகளுக்கு வர இயலும்.

சர்வதேசப் பொதுவுடைமை இயக்கத்தின் பொதுமார்க்கம் என்ன? என்ற கேள்விக்கு மேலே கூறப்பட்ட ஆவணம் கூறும் விடை :

''எல்லா நாடுகளிலுமுள்ள தொழிலாளர்களே, ஒன்று படுங்கள்! உலகத் தொழிலாளர்களே, ஒடுக்கப்படும் மக்களுட னும் ஒடுக்கப்படும் தேசங்களுடனும் ஒன்றுபடுங்கள்! ஏகாதி பத்தியத்தையும் எல்லா நாடுகளிலுமுள்ள பிற்போக்காளர்களை யும் எதிர்த்திடுக! உலக அமைதிக்காகவும் தேசிய விடுதலைக் காகவும் மக்கள் ஜனநாயகத்துக்காகவும் சோசலிசத்துக்காகவும் கடும் முயற்சி செய்திடுக! சோசலிச முகாமை வலுப்படுத்தி விரிவுபடுத்துக! பாட்டாளிவர்க்க உலகப் புரட்சியினைப் படிப் படியாக முழுவெற்றிக்குக் கொண்டுவருக! ஏகாதிபத்தியம் இல்லாத, முதலாளியம் இல்லாத, மனிதனை மனிதன் சுரண்டுவது இல்லாத ஒரு புதிய உலகினைக் கட்டியெழுப்புக!

இன்றைய கட்டத்தில் இதுதான் சர்வதேசப் பொது வுடைமை இயக்கத்தின் பொதுமார்க்கம் என்பது எங்கள் கருத்தாகும்''

(''ஒரு ஆலோசனை'', பக்கம் 4)

இதனைத் தொடர்ந்து, இப்பொதுமார்க்கத்தை நடை முறைப்படுத்துவதில் மேற்கொள்ளப்படவேண்டிய அடிப்படைக் கொள்கையினை மேற்காணும் ''ஆலோசனை'' விளக்குகிறது.

> ''அமெரிக்காவால் தலைமை தாங்கப்படும் ஏகாதி பத்தியவாதிகளையும் பிற்போக்குவாதிகளையும் எதிர்த்துப் போராட, சோசலிசமுகாமையும் உலகப் பாட்டாளிவர்க்கத்தையும் கருவாகக் கொண்ட ஒரு பரந்த அய்க்கிய முன்னணியை உருவாக்குவதுதான் இப் பொதுமார்க்கமாகும்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"எல்லா நாடுகளிலுமுள்ள மக்கள் உறுதிவாய்ந்த புரட்சிகரப் போராட்டத்தை நடத்துவதும் பாட்டாளி வர்க்க உலகப் புரட்சியை இறுதிவரை முன்னெடுத்துச் செல்வதும்தான் இப்பொதுமார்க்கமாகும்; அது ஏகாதிபத்தியத்தை மிகத்திறமையோடு எதிர்த்துப் போராடி உலக அமைதியைப் பாதுகாக்கும் மார்க்கமாகும்"

(மேலே குறிப்பிடப்பட்ட ஆவணம்)

இங்கு தரப்பட்டுள்ள பொதுமார்க்கத்தின் சாரம் மிகத் தெளிவானது: உலகப் பாட்டாளிவர்க்கத்தின் குறியிலக்கு அமெரிக்க ஏகாதிபத்தியத்தால் தலைமைதாங்கப்படும் உலக ஏகாதிபத்தியமும் அவற்றோடு இணைந்து நிற்கும் எல்லா நாட்டுப் பிற்போக்குவாதிகளுமாவர். சோசலிசமுகாம், உலகப் பாட்டாளிவர்க்கம், ஒடுக்கப்பட்ட மக்கள், அவர்களது விடுதலை இயக்கங்கள் ஆகியவைதான், இந்த எதிரிமுகாமுக்கு எதிராக உலகப் பொதுவுடைமை இயக்கத்தைக் கட்டுகின்ற புரட்சிகர முகாமை உருவாக்கும் கூறுகள். தெளிவாக வகுக்கப்பட்டதொரு வர்க்கமார்க்கத்தின் அடிப்படையில், எதிரி வர்க்கங்கள்யாவும் எதிரிமுகாமிலும் புரட்சிகர வர்க்கங்கள் அனைத்தும் புரட்சிகர முகாமிலும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

''சமாதான சகவாழ்வு'', ''சமாதானக் கூட்டுறவு'', ''சமாதான முறையில் சோசலித்துக்கான மாற்றம்'' என்ற சூத்திரங்களின் கீழ் குருச்சேவ் சாதிக்க முயன்றதெல்லாம் சர்வதேசப் பொதுவுடைமை இயக்கத்தின் பொதுமார்க்கத்தை அப்பட்டமான வர்க்க ஒத்துழைப்பு மார்க்கமாகமாற்றுவது தான். உலகப் பாட்டாளிவர்க்கத்தின் வர்க்கமார்க்கத்தைத் தெளிவாக வரையறுத்ததன் மூலம், சீனப் பொதுவுடைமைக் கட்சியானது குருச்சேவின் வர்க்க ஒத்துழைப்புக் கொள்கையை அம்பலப்படுத்தியது.

சமகால உலகில் நிலவுகின்ற அடிப்படை முரண்பாடுகள் பற்றிய ஆய்வின் அடிப்படையில்தான் இந்த சரியான பொது மார்க்கம் உருவாயிற்று. உலகிலுள்ள அடிப்படை முரண்பாடுகள் பற்றி லெனினும் ஸ்டாலினும் செய்த மதிப்பீட்டைப் பின்பற்றி சீ. பொ. க. கூறுவதாவது:

''சமகால உலகிலுள்ள அடிப்படை முரண்பாடுகள் யாவை? மார்க்சிய-லெனினியர்கள் உறுதிபடக் கூறுவன கீழ்வருமாறு:

www.tamilarangam.net



''சோசலிச முகாமுக்கும் ஏகாதிபத்திய முகாமுக்குமிடையே உள்ள முரண்பாடு.

''முதலாளிய நாடுகளில் உள்ள பாட்டாளிவர்க்கத்துக்கும் முதலாளி வர்க்கத்துக்குமிடையே உள்ள முரண்பாடு.

''ஒடுக்கப்பட்ட தேசங்களுக்கும் ஏகாதிபத்தியத்துக்குமிடையே உள்ள முரண்பாடு.

''ஏகாதிபத்திய நாடுகளுக்கிடையேயும் ஏகபோக முதலாளியக் குழுக்களிடையேயும் உள்ள முரண்பாடு''.

(மேலே கூறப்பட்ட ஆவணம், பக்கம் 6)

இந்த அடிப்படையான உலக முரண்பாடுகள் பற்றிய குருச்சேவியப் புரட்டர்களின் அணுகல் மார்க்சிய—எதிர்ப்புத் தன்மை கொண்டது. எல்லாவற்றுக்கும் முதலாவதாக, சோசலிச முகாமுக்கும் ஏகாதிபத்திய முகாமுக்கும் இடையிலுள்ள முரண்பாட்டின் வர்க்க உள்ளடக்கத்தை அவர்கள் மூடிமறைக்கிறார்கள்; பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் உள்ள அரசுகளுக்கும் முதலாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழுள்ள அரசுகளுக்கும் இடையிலான முரண்பாடாக அதைக் குறுக்குகிறார்கள். மேலும், சோசலிச முகாமுக்கும் ஏகாதிபத்திய முகாமுக்கும் இடையிலுள்ள இந்த முரண்பாட்டை இவ்வாறு கொச்சைப்படுத்திய பிறகு, இதர அடிப்படை முரண்பாடுகளை, அவற்றை ஒட்டுமொத்தமாகப் புறக்கணிப்பதன் மூலமோ அன்றி அவற்றின் முக்கியத்துவத்தைக் குறைத்துக் காட்டுவதன் மூலமோ, புறக்கணிக்கிறார்கள். இந்தத் தவறான கண்ணோட்டத்தை மேற்கொண்டு அவர்கள் முதலாளிவர்க்கத்துக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையே உள்ள முரண்பாட்டையும் அதே போல ஏகாதிபத்தியத்துக்கும் ஒடுக்கப்படும் தேசங்களுக்குமிடையே உள்ள முரண்பாட்டையும் ''பொருளாதாரப் போட்டி''யின் மூலமாக மட்டுமே தீர்க்கமுடியும் என்றும் வர்க்கப் போராட்டம், பாட்டாளிவர்க்கப் புரட்சி அல்லது தேசிய விடுதலைப் போரட்டம் என்பதன் மூலமாக அல்ல என்றும் வாதிடுகிறார்கள். சுருங்கக் கூறின், செயல்பாட்டின் ஒவ்வொரு துறையிலும் அவர்கள் வர்க்கப் போராட்டத்திற்குப் பதிலாக வர்க்க ஒத்துழைப்பை முன் வைக்கின்றனர்.

மாசேதுங்கும், சீ.பொ. கட்சியும் செய்ததெல்லாம், (உலக முரண்பாடுகளில்) சோசலிசத்துக்கும் ஏகாதிபத்தியத்துக்கு

www.tamilarangam.net



மிடையே உள்ள முரண்பாடு என்ற ஒரே ஒரு முரண்பாட்டை மட்டும் தனிமைப் படுத்தி அதன் முக்கியத்துவத்தைப் பெரிது படுத்தும் குருச்சேவ் மற்றும் அவனது கூட்டாளிகளின் கருத்துரையை விமர்சித்தது மட்டு மல்ல. அன்றிருந்த உலக நிலைமையை மாசேதுங்கும் சீ.பொ. கட்சியையும் புறநிலை ரீதியில் மதிப்பீடு செய்து, ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்கா ஆகியவற்றிலுள்ள ஒடுக்கப்படும் நாடுகளில் நடந்து வந்த ஏகாதிபத்திய—எதிர்ப்புப் போராட்டத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினர். நாம் மேலே குறிப்பிட்ட ஆவணத்தில் இது இவ்வாறு தொகுத்துரைக்கப்படுகிறது:

"(8) சம கால உலகிலுள்ள பல்வேறு வகை முரண்பாடுகளும் ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்கா ஆகியவற்றின் பரந்த பகுதிகளில் ஒருமுனைப்பட்டுள்ளன; ஏகாதிபத்திய ஆட்சியின் கீழுள்ள பகுதிகளில் மிகவும் பலகீனமானவை இவை; ஏகாதிபத்தியத்தை நேரடியாகத் தாக்குகின்ற, உலகப்புரட்சியின் புயல்மையங்கள் இவை"

**(மேற்கூறிய ஆவணம், பக்கம் 12)**

இப்பகுதிகளிலுள்ள தேசிய ஜனநாயகப் புரட்சிகர இயக்கங்கள் உண்மையில் ஏகாதிபத்தியத்தை அதன் வேரடி மண்ணிலிருந்து வெட்டி யெறியும் சக்தியுள்ளவை. வேறுவகையில் சொல்வதானால், இந்தப் பகுதிகளில் விடுதலை நிறைவேறினால்தான் ஏகாதிபத்தியத்தின் அத்திவாரம் உடைந்து நொறுங்கத் தொடங்கும். அப்போது தான் ஏகாதிபத்திய நாடுகளிலுள்ள பாட்டாளி வர்க்கப் போராட்டங்கள் தமது இலக்குக்கு மிக நெருக்கமாக வந்து சேரும். மேற் கூறப்பட்ட ஆவணம் மேலும் கூறுவதாவது.

"எனவே ஒரு பொருளில் கூறுவதானால், சர்வதேசப் பாட்டாளி வர்க்கப் புரட்சிப் பாதை முழுவதும், உலக மக்கள் தொகையில் மிகப் பெரும் பான்மையினராக அமைகிற இப்பகுதிகளிலுள்ள மக்களின் புரட்சிகரப் போராட்டங்களின் விளைவையே சார்ந்துள்ளன"

**(மேலே குறிப்பிட்ட ஆவணம், பக்கம் 13)**

சம கால உலகில், ஏகாதிபத்தியத்துக்கும் ஒடுக்கப்படும் தேசங்களுக்கு மிடையே உள்ள முரண்பாடுதான் மிக முக்கியமான முரண்பாடு என்று, சீ.பொ. கட்சியின் இந்த ஆவணம் தெட்டத் தெளிவாகக் கூறா விட்டாலும், இந்த முரண்

www.tamilarangam.net



பாட்டுக்கு மற்றவற்றைக் காட்டிலும் கூடுதலான முக்கியத்து வத்தையும் சிறப்பு அழுத்தத்தையும் தருவதே அவர்களது அணுகலாக இருக்கிறது என்பது தெளிவு. இரண்டாம் உலகப் போருக்குப் பிந்திய கால கட்டத்தில் உலக நிலைமையில் ஏற் பட்டுள்ள மாற்றங்களைப் புறநிலை ரீதியாக ஆய்வு செய்ய முயற்சி செய்யும் எவரும் சீ.பொ. கட்சியின் இந்த மதிப்பீட்டை ஏற்கவே செய்வர்.

இந்நாடுகளில் உள்ள பாட்டாளி வர்க்கக் கட்சிகள் ஏகாதி பத்தியத்துக்கும் உள்நாட்டுப் பிற்போக்குச் சக்திகளுக்கும் எதி ரான போராட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய நிலைப் பாட்டை சீன ஆவணம் முன்வைக்கிறது. அது சர்வதேசப் பொதுவுடைமை இயக்கத்தின் பொது மார்க்கத்துடன் ஒத் திசைகிற தெளிவான வர்க்க நிலைப் பாடாகும். எல்லாவகை யான வர்க்க ஒத்துழைப்பு வாதத்தையும் விமர்சித்து எவ்வித ஐயத்துக்கும் இடம் தராமல், இந்த ஆவணம் அறிவிப்பதாவது:

''புரட்சியில், பாட்டாளிவர்க்கமானது நிலப்பிரபுக்கள், முதலாளி வர்க்கம் ஆகியவற்றின் வாலாக மாறி விட்டால், தேசிய ஜனநாயகப் புரட்சியில் ஒரு உண்மையான அல்லது முழுமையான வெற்றி என்பது சாத்திய மில்லை; ஏதேனும் ஒரு வகை வெற்றி கிடைப்பதாயிருந்தாலும் கூட அப்புரட்சியை வலுப்படுத்திக் கொள்ள முடியாது''.

(பக்கம் 17,18)

ஒடுக்கப்படும் மக்களின் ஏகாதிபத்திய-எதிர்ப்புப் போராட் டத்துக்கு அழுத்தம் தரும் அதே வேளையில் ஏகாதிபத்திய, முதலாளிய நாடுகளில் பாட்டாளி வர்க்கத்தின் போராட்டத் துக்குள்ள முக்கியத்துவம் மீதுள்ள அழுத்தம் சிறிது கூட குறைக்கப்படுவதில்லை. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அச் சுறுத்தல்களுக்கும்-நிர்ப்பந்தங்களுக்கும் உட்படுத்தப்பட்டுள்ள முதலாளிய நாடுகளிலுள்ள பாட்டாளி வர்க்கம், அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு எதிராகவும், தமது ''சொந்த நாட்டு'' ஏகபோக முதலாளியத்துக்கு எதிராகவும் போராட வேண்டும். அன்றாடத் தேவைகளுக்கான போராட்டத்தில், அதாவது அந் தந்த நேரத் தேவைகளுக்கான போராட்டத்தில் உழைக்கும் வர்க்கம் மூழ்கி விடக் கூடாது; மாறாக அரசியல் அதி காரத்தைக் கைப்பற்றுதல் என்ற நீண்ட காலக் குறிக்கோளை எப்போதும் கருத்தில் கொண்டு போராட்டத்தை நடத்த வேண்டும். அதே சமயம், ஒடுக்கப்படும் நாடுகளிலுள்ள மக்களில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



புரட்சிகரப் போரட்டத்தைச் செயலூக்கமுள்ள வகையின் ஆதரிப்பது முதலாளிய நாடுகளிலுள்ள உழைக்கும் வர்க்க இயக்கத்தின் இன்றியமையாக் கடமையாகும்; இக்கடமையினை அது ஒரு போதும் கைவிடக் கூடாது.

**2. சோசலிச நாடுகளின் வெளி நாட்டுக் கொள்கையும் சமாதான சக வாழ்வும்**

சர்வதேசப் பொதுவுடைமை இயக்கத்தின் பொது மார்க்கத்துக்கு எதிரான வகையில் சோசலிச நாடுகளின் வெளிநாட்டுக் கொள்கை உருவாக்கப்படக் கூடாது. இந்தப் பொது மார்க்கமும் ஒரு சோசலிச நாட்டின் வெளிநாட்டுக் கொள்கையும் ஒன்றுக் கொன்று உறவுடைய ஒன்றுக்கு கொன்று பொருத்தமானவை என்றாலும் கூட, இரண்டையும் சரிநிகரானவையாகக் கருதி அவற்றை ஒன்றாகச் சேர்ப்பது அபாயகரமானதாகும். இதைத்தான் குருச்சேவும் அவனது கூட்டாளிகளும் செய்தனர். இந்தச் சித்தாந்தக் குழப்பத்தை நாம் நீக்க வேண்டுமானால், ஒரு சோசலிச நாட்டின் வெளியுறவுக் கொள்கை எப்படி இருக்க வேண்டும் என்பதை நாம் துல்லியமாக வரையறுக்க வேண்டும். அதைக் கீழ்வருமாறு சீ.பொ.க. தனது ஆவணத்தில் வரையறுக்கிறது:

''சோசலிச நாடுகளின் வெளியுறவுக் கொள்கை கீழ்க் காணும் உள்ளடக்கத்தைப் பெற்றிருந்தல் வேண்டும் என்பதே எமது கருத்து. பாட்டாளிவர்க்க சர்வதேசிய நெறிக்கு உகந்த வகையில் சோசலிச முகாமின் நாடுகளுக்கிடையே நட்பு உறவுகளை வளர்த்தல்; ஒன்றுக் கொன்று உதவி செய்தல், ஒத்துழைத்தல்; வேவ்வேறு சமூக அமைப்புகளைக் கொண்ட நாடுகளுடன் ஐந்து நெறிகளின் அடிப்படையில் சமாதான சகவாழ்வு நடத்துதலும், ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பு மற்றும் போர்க் கொள்கைகளை எதிர்த்தலும்; எல்லா ஒடுக்கப்பட்ட மக்கள், தேசங்கள் ஆகியவற்றின் புரட்சிகரப் போராட்டங்களை ஆதரித்தலும் அவற்றுக்குக்கு உதவுதலும். இந்த மூன்று கூறுகளும் ஒன்றுக் கொன்று உறவுடையன; பிரிக்க முடியாதன; ஒன்று கூடப் புறக்கணிக்கப்பட முடியாதது ஆகும்''

(மேற்கூறிய ஆவணம் பக்கம்—36)

வேவ்வேறு சமூக அமைப்புகளை கொண்ட நாடுகளுடன் கொள்ள வேண்டிய உறவுகளைத் தீர்மானிக்கிற சமாதான சக வாழ்வுக் கொள்கையை மட்டும் தனிமைப்படுத்தி அதை சோசலிச நாடுகளின் வெளியுறவுக் கொள்கையின் பொது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மார்க்கமாக மட்டுமின்றி சர்வதேசப் பொதுவுடைமை இயக்கத்தின் பொது மார்க்கமாகவும் ஆக்குவது என்பதைத்தான் குருச்சேவும் அவனது கூட்டாளிகளும் விடாப்பிடியாகச் செய்தனர். புரட்டல்வாதிகளின் வாதம் என்னவென்றால், வேவ்வேறு சமூக அமைப்புகளைக் கொண்ட நாடுகளுடன் சமாதான சக வாழ்வின் அடிப்படையில் உறவுகளை நிறுவுவதன் மூலம் தேசிய சர்வதேசியப் புரட்சியின் நோக்கங்களை நிறைவேற்ற முடியும், சோசலிசத்துக்கும் கம்யூனிசத்துக்குமான மாற்றம் எளிதாகி விடும் என்பதாகும். இதற்கு சீ.பொ.க அளித்த விடை கீழ் வருமாறு:

"சமாதான சக வாழ்வு பற்றிய லெனினின் நெறி, மிகத் தெளிவானதும் சாதாரண மக்களால் உடனடியாகப் புரிந்து கொள்ளப்படக்கூடியதும் ஆகும். சமாதான சக வாழ்வு என்பது வேவ்வேறு சமூக அமைப்புகளைக் கொண்ட நாடுகளுடன் கொள்ள வேண்டிய உறவுகளைக் குறிப்பிடுகின்றது. எனவே அவரவர் விருப்பத்திற்கேற்ப அது விளக்கப்படக் கூடாது. ஒடுக்கும் நாடுகளுக்கும் ஒடுக்கப்படும் நாடுகளுக்கு மிடையே உள்ள உறவுகளுக்கோ அல்லது ஒடுக்கும் வர்க்கங்களுக்கும் ஒடுக்கப்படும் வர்க்கங்களுக்குமிடையே உள்ள உறவுகளுக்கோ பிரயோகிக்கப்படும் வகையில் ஒரு போதும் அதை விரிவு படுத்தக் கூடாது. அது சோலிசசத்துக்கும் கம்யூனிசத்துக்குமான மாற்றத்தின் உள்ளடக்கம் என்று ஒரு போதும் வர்ணிக்கப்படக் கூடாது; சமாதான சகவாழ்வு என்பது சோசலிசத்தை நோக்கிய மனித குலத்தின் பாதை என்று சிறிதளவு கூட வலியுறுத்தப்படக் கூடாது. காரணம் என்னவெனில், வேவ்வேறு சமூக அமைப்புகளைக் கொண்ட நாடுகளுடன் சமாதான சகவாழ்வை நடை முறைப்படுத்துவது என்பது ஒரு விஷயம்.... வர்க்கப் போரட்டம். தேசிய விடுதலைக்கான போரட்டம், பல்வேறு நாடுகளில் முதலாளியத்திலிருந்து சோசலிசத்துக்கு மாறிச்செல்லுதல் என்பன முற்றிலும் வேறொரு விஷயம். அவை யாவும், சமூக அமைப்பை மாற்றும் நோக்கம் கொண்ட கசப்பான, ஜீவ—மரணப்புரட்சிகரப் போராட்டங்களாகும். மக்களின் புரட்சிகரப் போராட்டங்களுக்குப் பதிலியாக சமாதான சக வாழ்வு இருக்க முடியாது. எந்த ஒரு நாட்டிலும் முதலாளியத்திலுருந்து சோச

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



லிசத்துக்கான மாற்றம் என்பது அந்த நாட்டில் பாட்டாளி வர்க்கப் புரட்சி, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் ஆகியவற்றின் மூலமே உருவாக்கப்பட முடியும்."

**(மேற் கூறிய ஆவணம், பக்கம் 34-35)**

அடிப்படையான மார்க்சிய—லெனினிய அணுகலைத்தூக்கி யெறிந்து விட்டு, குருச்சேவும் அவனது கூட்டாளிகளும் சமாதான சகவாழ்வு என்ற கருத்தைத் திரிந்து அதை உலகப் பொதுவுடைமை இயக்கத்தின் பொது மார்க்கமாக மாற்ற முயன்றனர். மாசேதுங்கும் சீ.பெ. கட்சியும் இந்தப் புரட்டல்வாத அணுகலை விமர்சித்தபோது, குருச்சேவும் அவனது கூட்டாளிகளும் சமாதான சகவாழ்வு பற்றிய லெனினின் கொள்கையை மாவோவும் சீ.பொ. கட்சியும் புறக்கணித்து விட்டதாக எதிர்க் குற்றச் சாட்டைத் கொடுத்தனர். இந்தக் குற்றச் சாட்டுக்கு சீ.பொ.க. தந்த விடை, 'மக்கள் தினசரி' 'செங்கொடி' ஆகியவற்றின் ஆசிரியர் குழுக்களால் கூட்டாக எழுதப்பட்ட கட்டுரையான "சமாதான சகவாழ்வு இரு எதிரும்புதிருமான கொள்கைகள்" என்பதில் தெளிவான முறையில் தரப்பட்டுள்ளது. 1963 டிசம்பர் 12 ஆம் நாள் எழுதப்பட்ட இக்கட்டுரையில் பிரச்சனைகள் துல்லியமாகக் கையாளப் பட்டுள்ளன.

தனியொரு நாட்டில் சோசலிசம் சாத்தியமானது என்ற தனது ஆய்வுரையின் தொடர்ச்சியாகவே சமாதான சகவாழ்வுக் கொள்கையை லெனின் உருவாக்கினர். ஒரு தனிநாட்டில் புரட்சி வெற்றி பெற்ற பிறகு, அங்கு சோசலிசம் கூட்டப்பட வேண்டுமென்றால், முதலாளிய ஏகாதிபத்திய நாடுகளின் வளையத்துக்கு நடுவில் நின்றுதான் அதைச் செய்ய முடியும். இதன் பொருள் இந்த நிலைமை எப்போதுமே நீடித்து வரும் என்பதல்ல. சமாதான சகவாழ்வு தொடர்ந்து நீடிப்பதை ஏகாதிபத்தியம் அனுமதிக்காது. ஏகாதிபத்தியத்தின் தாக்குதல், சீர்குலைவு ஆகியவற்றுக்கு எதிராக இடைவிடாது எச்சரிக்கையுடன் இருப்பதன் மூலமே ஒரு சோசலிச நாட்டால் சமாதான சகவாழ்வுக் கொள்கையை நடைமுறைப்படுத்த முடியும். இக்காரணம் கருதியே போராட்டத்தின் அடிப்படையில் மட்டுமே ஒரு சோசலிச நாடு ஏகாதிபத்திய நாடுகளுடன் சமாதான சகவாழ்வு நடத்த முடியும் என்று லெனின் கூர்மையாகச் சுட்டிக் காட்டினார்.

இக் கொள்கையை நடைமுறைப் படுத்துவதில், முதலாளிய உலகிலுள்ள வேவ்வேறு வகை நாடுகளுடன் வேவ்வேறு அணுகல்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



களை மேற்கொள்ள வேண்டிய தேவையை லெனின் சுட்டிக்காட்டினார். மேலே குறிப்பிடப்பட்ட சீனக்கட்டுரையும் கூட, 'ஏகாதிபத்திய நுகத்தடியின் கீழ் அவதியுறும் மக்கள் அனைவரதும் நலன்களும் ஒன்றிணைகின்றன' என்றும் ''ஏகாதிபத்தியத்தின் உலகக் கொள்கையானது, எல்லா ஒடுக்கப்பட்ட தேசங்களும் தம்மிடையே மேலும் நெருக்கமான உறவுகளையும் கூட்டணியையும், நட்பையும் நிறுவுவதற்கு இட்டுச் செல்கிறது'' என்றும் லெனின் கூறியவற்றை எடுத்துக் காட்டுகின்றது. சமாதான சகவாழ்வுக் கொள்கையை அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ள பாட்டாளிவர்க்கம் வேவ்வேறு சமூக அமைப்புகளைக் கொண்ட நாடுகளுடன் மேற்கொள்ள வேண்டிய அணுகலாக மட்டுமே லெனின் உருவாக்கினார். ஒரு சோசலிச நாட்டின் வெளியுறவுக் கொள்கையின் ஒட்டு மொத்தமே அதுதான் என்று லெனின் ஒருபோதும் கருதியதில்லை. மேலும், ஒடுக்கப்படும் வர்க்கங்களும் தேசங்களும் ஒடுக்கும் வர்க்கங்களுடனும் தேசங்களுடனும் சமாதான முறையில் வாழ முடியாது என்பதை லெனின் எப்போதும் வலியுறுத்தினார்.

பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தை சோவியத் யூனியனின் வெளியுறவுக் கொள்கையின் சாரமான உள்ளடக்கமாக தத்துவம் நடைமுறை இரண்டிலும் உயர்த்துப் பிடிக்க ஸ்டாலினும் கூடத் தம்மால் இயன்ற தனைத்தையும் செய்தார்.

லெனினும் ஸ்டாலினும் வகுத்துத்தந்த அதே நெறிகளை அடிப்படையாகக் கொண்டுதான் மாசேதுங்கும் சீ.பொ. கட்சியும் சீனத்தின் வெளியுறவுக் கொள்கையை வகுத்தனர். இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் உலக நிலைமையில் ஏற்பட்ட மாற்றங்கள், சமாதான சகவாழ்வுக் கொள்கையை நடைமுறைப்படுத்த முன்னைக் காட்டிலும் கூடுதலான சாதகமான நிலைமைகளை உருவாக்கியிருப்பதாக சீ.பொ.க. மதிப்பீடு செய்தது. இத்தகைய சாத்கமான நிலைமைகளுக்கு அடித்தளங்களாக இருந்தவை, தேசிய விடுதலை இயக்கங்களின் வளர்ச்சியும், தேசிய அரசுகளின் உதயமும் ஆகும். இப்புதிய நிலைமைகளில் சமாதான சகவாழ்வுக் கொள்கையை நடைமுறைப்படுத்தும் அதே வேளையில், சம்பந்தப்பட்ட நாடுகளிலுள்ள வேறுபாடுகளைக் கருத்தில் கொண்டு வேவ்வேறு அணுகல்களை மேற்கொள்வது அவசியம் என்று சீ.பொ.க. கூறிற்று. எனவே, சீ. பொ. க. சோசலிச நாடுகள் அல்லாதவற்றை முதன்மையாக மூன்று திணைகளாகப் பாகுபடுத்தி அவற்றுக்கான தனது அணுகல்களை வகுத்தது; இப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பாகுபாடு சமாதான சகவாழ்வு பற்றி 1963 இல் பிரசுரிக்கப்பட்ட கட்டுரையில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் உலகப் போரைத் தொடர்ந்து உருவான சூழ்நிலையில், ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்கா ஆகியவற்றிலுள்ள பல நாடுகள் அரசியல் சுதந்திரம் பெற்றன; இவை ஒரு திணைக்குள் அடங்குவன. ஏகாதிபத்திய-எதிர்ப்பு போன்ற பிரச்சனைகளில் இந்நாடுகள் சோசலிச நாடுகளின் நலன்களுக்கு இசைவானவை. எனவே, சமாதான சகவாழ்வு என்ற அடிப்படையில் இத்தகைய நாடுகளுடன் சோசலிச நாடுகள் நெருக்கமான உறவுகளை ஏற்படுத்துவது மக்களின் ஏகாதிபத்திய-எதிர்ப்புப் போராட்டத்திற்கு அனுகூலமானது. ஆயினும், ஐந்து நெறிகளின் அடிப்படையில் நெறிபிறழாத உறவுகளைக் கட்டியெழுப்புவதன் மூலமே இது சாத்தியமாகும். மேற்காணும் திணைக்குள் அடங்காத வளர்ச்சியடைந்த நாடுகள் முதலாளிய நாடுகள், ஏகாதிபத்திய நாடுகள் என இரண்டாகப் பாகுபடுத்தப்பட்டன. புரட்சிகர இயக்கங்கள், தேசிய விடுதலை இயக்கங்கள் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு இணையாக சாதாரண முதலாளிய நாடுகளுக்கும் ஏகாதிபத்திய நாடுகளுக்குமிடையேயும் ஏகாதிபத்திய நாடுகளுக்குள்ளேயும் முரண்பாடுகள் கூர்மையடைகின்றன. கூர்மையடைந்து வரும் இம் முரண்பாடுகளை பயன்படுத்திக் கொண்டு, இவற்றில் சிலவற்றுடன் சமாதான சகவாழ்வு உறவுகளை சோசலிச நாடுகள் நிறுவுவது சாத்தியமானதாகும்.

நாடுகளை இவ்வகையில் பாகுபடுத்தி அதற்குகந்த வகையில் அவற்றுடன் உறவுகளை ஏற்படுத்தி கொள்ளுதல் என்பதெல்லாம் வேவ்வேறு சமூக அமைப்புகளைக் கொண்ட நாடுகளுடன் சமாதான சகவாழ்வுக் கொள்கையை நடைமுறைப் படுத்துதலாகும். ஒரு போதும் இது, ஒரு சோசலிச நாட்டின் வெளியுறவுக் கொள்கைக்கான பொதுமார்க்கமாக ஆவதில்லை. இவ்வாறு சமாதான சகவாழ்வை நடைமுறைப்படுத்தும் அதே வேளையில் சீனத்தின் வெளியுறவுக் கொள்கையின் அடிப்படை உள்ளடக்கம் என்பது ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்கா ஆகியவற்றிலுள்ள தேசிய விடுதலை இயக்கங்களுக்கும் மேற்கு ஐரோப்பா, வடஅமெரிக்கா, ஆஸ்திரேலியா ஆகியவற்றிலுள்ள தொழிலாளிவர்க்க இயக்கங்களுக்கும் மக்களின் புரட்சிகர இயக்கங்கள் அனைத்திற்கும் செயலூக்கமுள்ள ஆதரவு கொடுத்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தல் என்பதாகவே இருந்தது. மாசேதுங்கின் தலைமையிலிருந்த சீனப் பொதுவுடைமைக் கட்சி இந்த அடிப்படைக் கொள்கையி லிருந்து ஒரு போதும் விலகிச் செல்லவில்லை.

ஆனால் குருச்சேவும் அவனது கூட்டாளிகளும் மேற் கொண்ட அணுகல் இதற்கு நேர் முரணானது. நாம் மேலே குறிப்பிட்ட கட்டுரையானது சமாதான சகவாழ்வு பற்றிய லெனினின் கொள்கையையும் குருச்சேவின் அணுகலையும் தெளிவாக விளக்குகிறது.

''சமாதான சகவாழ்வு பற்றிய லெனினின் கொள்கையானது, வேவ்வேறு சமூக அமைப்புகளைக் கொண்ட நாடுகளுடன் கொள்ளும் தனது உறவுகளில் ஒரு சோசலிச நாடு பின்பற்ற வேண்டிய கொள்கை யாகும் ஆனால் சமாதான சகவாழ்வு என்பது நவீன சமுதாயத்தை நெறிப்படுத்திச் செய்கிற மிகஉயர்ந்த கோட்பாடு என குருச்சேவ் வர்ணிக்கிறார்.

''சமாதான சகவாழ்வு பற்றிய லெனினின் கொள்கையானது, ஆட்சியதிகாரத்திலுள்ள பாட்டாளி வர்க்கத்தின் சர்வதேசக் கொள்கையின் ஒருகூறு ஆகும்; ஆனால் சமாதான சகவாழ்வு என்பதை சோசலிச நாடு களின் வெளியுறவுக் கொள்கைக்கான பொதுமார்க்க மாக குருச்சேவ் விரிவுபடுத்துகிறார்; தொடர்ந்து அதை எல்லாப் பொதுவுடைமைக் கட்சிகளுக்குமான பொதுமார்க்கமாகவும் அதை விரிவுபடுத்துகிறார்.

''சமாதான சகவாழ்வு பற்றிய லெனினின் கொள்கையானது, ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பு மற்றும் போர்க்கொள்கைகளுக்கு எதிராகச் செலுத்தப் படுவதாகும்; ஆனால் குருச்சேவின் சமாதான சக வாழ்வோ ஏகாதிபத்தியத்துக்கு ஊட்டம் கொடுத்து ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பு மற்றும் போர்க் கொள்கைகளுக்கு ஒத்தாசை புரிகிறது;

''சமாதான சகவாழ்வு பற்றிய லெனினின் கொள்கையானது, சர்வதேச வர்க்கப்போராட்டம் என்ற நிலைப்பாட்டை அடிப்படையாகக் கொண்டது; குருச்வேவின் சமாதான சகவாழ்வோ சர்வதேசவர்க்க ஒத்துழைப்பை சர்வதேசவர்க்கப் போராட்டத்திற்குப் பதிலியாக்கக் கடும் முயற்சி செய்கிறது''

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



('சமாதான சகவாழ்வு—இரண்டு எதிரும் - புதிரு
மான கொள்கைகள்', பீகிங் 1963, பக்கம் 20-21)

மேற்காணும் ஆய்விலிருந்து சில அடிப்படையான விஷயங்கள் பெறப்படுகின்றன. தேசிய, சர்வதேசிய வர்க்கப் போராட்டத்தின் அடிப்படையில் சர்வதேசப் பொதுவுடைமை இயக்கத்தின் பொதுமார்க்கம் வகுக்கப்படுகிறது. இதை சோசலிச நாடுகளின் வெளியுறவுக் கொள்கையுடன் ஒன்று கலந்துவிடக் கூடாது: சோசலிச நாடுகளின் வெளியுறவுக் கொள்கையின் மூன்று அம்சங்களில் மிக முக்கியமானது பாட்டாளிவர்க்க சர்வதேசியமாகும். மற்றொரு அம்சமான சமாதான சகவாழ்வு என்பது வெவ்வேறு சமூக அமைப்புகளைக் கொண்ட நாடுகளுடன் உறவுகளை ஏற்படுத்திக் கொள்வதற்கான ஒரு கொள்கைதான். குருச்சேவ் போல அதை நீட்டி விரித்து, சோசலிச நாடுகளின் வெளியுறவுக் கொள்கையின் பொது மார்க்கமாகவும் சர்வதேசப் பொதுவுடைமை இயக்கத்தின் பொதுமார்க்கமாகவும் ஆக்குவது மிக மிக ஆபத்தானதாகும்; குருச்சேவின் இந்த எதிர்ப்புரட்சிப் போர்தந்திரத்தைத்தான் மாசேதுங்கின் தலைமையிலிருந்த சீனப் பொதுவுடைமைக்கட்சி விட்டுக்கொடுக்காமல் எதிர்த்துப் போராடியது;

## 3. சர்வதேசச் சூழ்நிலைமையில் ஏற்பட்ட மாற்றங்கள்

குருச்சேவின் புரட்டல் வாதத்துக்கு எதிரான போராட்டத்தில், சர்வதேசப் பொதுவுடைமை இயக்கத்தின் பொது மார்க்கம் எவ்வாறு சரியான முறையில் வரையறுக்கப்பட்டது என்பதை நாம் மேலே கண்டோம். அதற்குப் பிறகு உலக நிலைமையில் அடிப்படையான மாற்றம் ஏதேனும் ஏற்பட்டுள்ளதா என்பதை இப்போது நாம் ஆராய வேண்டியுள்ளது; சோவியத் யூனியன் சமூக-ஏகாதிபத்தியமாக மாற்றப்பட்டதும் சோசலிச முகாமிலுள்ள மிகப்பெரும்பான்மையான நாடுகள் முதலாளியத்துக்குள் சீரழிந்துவிட்டதும் உலக நிலைமைகளை மாற்றியுள்ளன என்பது ஒரு உண்மையாகும். 1969 இல் நடந்த சீ. பொ. கட்சியின் 9 ஆம் பேரவையால் ஏற்றுக் கொள்ளப்பட்ட அரசியல் அறிக்கை இம்மாற்றத்தைப் பிரதிபலித்தது. 9 ஆம் பேரவையில், 1963 ஆம் ஆண்டின் பொது மார்க்கத்தில் சுட்டிக்காட்டப்பட்ட நான்கு அடிப்படையான உலக முரண்பாடுகள் கீழ்வருமாறு விரிவாக விளக்கப்பட்டன:



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



''தலைவர் மாவோ அண்மையில் சுட்டிக்காட்டிய தாவது: ''உலகப்போர் என்ற பிரச்சனையைப் பொறுத்தவரை இரண்டு சாத்தியப்பாடுகள் உள்ளன; ஒன்று, போர் புரட்சிக்கு வழிவகுக்கும், மற்றொன்று, புரட்சி, போரைத் தடுத்து நிறுத்தும்'' இதற்குக் காரணம் இன்றைய உலகில் முக்கியமாக நான்கு முரண்பாடுகள் உள்ளன: ஓர்புறம் ஒடுக்கப்பட்ட தேசங்களுக்கும் மற்றொருபுறம் ஏகாதிபத்தியம், சமூக-ஏகாதிபத்தியம் ஆகியவற்றுக்கும் இடையிலான முரண்பாடு; முதலாளிய நாடுகளிலும் புரட்டல்வாத நாடுகளிலும் உள்ள பாட்டாளிவர்க்கத்துக்கும் முதலாளிவர்க்கத்துக்கும் இடையிலான முரண்பாடு; ஏகாதிபத்திய நாடுகளுக்கும் சமூக-ஏகாதிபத்திய நாடுகளுக்கு மிடையே உள்ள முரண்பாடும் ஏகாதிபத்திய நாடுகளுக்கிடையிலேயே இருக்கிற முரண்பாடும்; ஓர் புறம் சோசலிச நாடுகளுக்கும் மற்றோர்புறம் ஏகாதிபத்தியம், சமூக-ஏகாதிபத்தியம் ஆகியவற்றுக்கும் இடையிலான முரண்பாடு. இந்த முரண்பாடுகளின் இருப்பும் வளர்ச்சியுமே தவிர்க்கவியலாதவாறு புரட்சிக்கு வழிவகுக்கும்''.

இவை, லெனினும் ஸ்டாலினும் வரையறுத்ததும் பொது மார்க்கத்தால் மீண்டும் உறுதி செய்யப்பட்டதுமான அதே நான்கு அடிப்படை உலக முரண்பாடுகள் தாம். ஆயினும்' அவற்றில் சில குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஏகாதிபத்தியத்துடன் சமூக—ஏகாதிபத்தியம் சேர்ந்து உலக மக்களின் பகைவனாகியுள்ளது. எனவே, எல்லா முரண்பாடுகளிலும் சமூக—ஏகாதிபத்தியம் என்பது கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய ஒரு அம்சமாக ஆகியுள்ளது. மேலும், 1963 ஆம் ஆண்டிலேயே அழுத்தம் தரப்பட்ட முரண்பாடான ஒடுக்கப்படும் தேசங்களுக்கும் ஏகாதிபத்தியத்துக்கும் இடையிலான முரண்பாடு, இப்போது முதன்மை நிலையில் வைக்கப் படுகிறது. இது ஒரு புதிய கருத்தல்ல; இரண்டாம் உலகப் போருக்குப் பிந்திய சர்வதேச நிலைமையை மதிப்பீடு செய்து சீ.பொ. கட்சியால் முன்வைக்கப்பட்ட பொது மார்க்கத்தில் இத்தகையதொரு அணுகலுக்கான தேவை ஏற்கனவே சாடையாகக் குறிப்பிடப்பட்டது. ஆயினும், இந்த முரண்பாடுதான் மிக முக்கியமானமுரண்பாடு என வரையறுப்பதன்மூலம் புதிய நிலைமையின் குறிப்பிட்ட தன்மை தெளிவாக எடுத்துக் காட்டப்படுகிறது. ஆனால் இதன் பொருள், 1963 ஆம் ஆண்டில் முன்வைக்கப்பட்ட பொது மார்க்கத்தில் வகுக்கப்பட்ட உலகப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



புரட்சிகரப் போர்த் தந்திரத்தின் பொதுவான உலகக் கண்ணோட்டத்தில் இப்போது மாற்றம் ஏதோ ஏற்பட்டுவிட்டது என்பதல்ல. பொது மார்க்கத்தில் முன் வைக்கப்பட்ட அதே அணுகலைத்தான் 9 ஆவது பேரவையும்கூட வலியுறுத்தியது. 9 ஆம் பேரவையின் அறிக்கை கூறுவதாவது:

''இன்று உலகின் விதியைத் தீர்மானிப்பவை, ஏகாதிபத்தியம், புரட்டல் வாதம், பிற்போக்குச் சக்திகள் ஆகியவை அல்ல; மாறாக எல்லா நாடுகளிலுமுள்ள பாட்டாளிவர்க்கங்களும் புரட்சிகர மக்களும் தான். பல்வேறு நாடுகளிலுள்ள பாட்டாளிவர்க்கத்தின் முன்னேற்றமடைந்த பிரிவுகளால் உருவாக்கப்பட்ட உண்மையான மார்க்சிய - லெனினியக் கட்சிகளும் அமைப்புகளும், எல்லையற்ற அளவு பரந்த எதிர் காலத்தைக் கொண்ட ஒரு புதிய, எழுச்சி பெற்று வரும் சக்தியாகும். அவற்றோடு ஒன்றுபட்டு சேர்ந்து போராட சீ.பொ.க. உறுதிபூண்டுள்ளது....; எல்லா நாடுகளின் மக்களின் புரட்சிகரப் போராட்டத்தை நாம் உறுதியாக ஆதரிக்கிறோம்; அமெரிக்க ஏகாதிபத்தியம், சோவியத் புரட்டல் வாதம் ஆகியவற்றின் ஆக்கிரமிப்புக்கும் ஒடுக்கு முறைக்கும் எதிரான நியாயமான போராட்டங்கள் அனைத்தையும் நாம் உறுதியுடன் ஆதரிக்கிறோம். அமெரிக்க ஏகாதிபத்தியம், சோவியத் ஏகாதிபத்தியம் ஆகியவற்றின் ஆக்கிரமிப்புக்கும் கட்டுப் பாட்டுக்கும் தலையீட்டுக்கும் அச்சுறுத்தலுக்கும் உட்பட்டுள்ள அனைத்து நாடுகளும் மக்களும் ஒன்று பட்டு கூடுமான வரையில் மிகவும் பரந்துபட்ட அய்க்கிய முன்னணியைக் கட்டி, நமது பொது எதிரிகளைத் தூக்கியெறிவீராக.''

**('ஒன்பதாம் பேரவை' பக்கம் 48, விசார் பிரகாஷன், 1969)**

இதிலிருந்து தெளிவாவது என்னவெனில் பொதுமார்க்கத்தில் முன்வைக்கப்பட்ட அதே உலகப் புரட்சிகர மார்க்கம்தான் 9 ஆம் பேரவையிலும் முன்வைக்கப்பட்டது என்பதாகும். ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்கா ஆகியவற்றிலுள்ள மக்களின் புரட்சிகரப் போராட்டங்களையும், இவற்றுக்குத் தலைமை நல்கும் மார்க்சிய-லெனினியக் கட்சிகளையும்தான் 9ஆவது பேரவை, ஏகாதிபத்தியத்துக்கும் சமூக—ஏகாதிபத்தியத்துக்கும் எதிரான முதன்மையான சக்தியாகக் கருதுகிறது: ஆக்கிரமிப்புக்கும் தலையீட்டுக்கும் உட்பட்டுள்ள நாடுகள்,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மக்கள் ஆகியோரின் மிகப் பரந்த அய்க்கிய முன்னணியை அமைப்பதற்கான அறைகூவல், குருச்சேவும் அவனது நவீன சீடர்களும் முன்வைக்கிற வர்க்க ஒத்துழைப்புக் கொள்கையிலிருந்து முற்றிலும் மாறுபட்டது. அக்டோபர் புரட்சிக்குப் பிந்திய புதிய சகாப்தத்தில், உலகப்புரட்சி இயக்கம் முன்வைத்த பொது மார்க்கம் என்பது எப்போதுமே முதலாளிய நாடுகளிலுள்ள பாட்டாளிவர்க்கப் புரட்சிகர இயக்கங்கள், காலனி, அரைக் - காலனி நாடுகளிலுள்ள தேசிய இயக்கங்கள் ஆகியவற்றின் பரந்த அய்க்கிய முன்னணி என்பதாகவே இருந்தது. ஏகாதிபத்தியம், சமூக ஏகாதிபத்தியம் ஆகியவற்றின் ஆக்கிரமிப்புக்கு உட்பட்ட நாடுகளும் கூட இந்த அய்க்கிய முன்னணியின் பகுதியாக மாறியது இயல்பானதே. 1970 இல் கம்பூசியா தாக்கப்பட்டபோது, இந்தோ-சீனாவில் அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு எதிராக ஒரு அய்க்கிய முன்னணியை அமைக்குமாறு மாசேதுங் அறைகூவல் விடுத்தார், இதற்கிணங்க, அமெரிக்கா ஆக்கிரமிப்புக்கு உட்பட்ட இந்தோ—சீன நாடுகளும் விடுதலை இயக்கங்களும் சேர்ந்த ஒரு அய்க்கிய முன்னணி உருவாக்கப்பட்டது. அந்த அய்க்கிய முன்னணிக்கு உலகம் முழுவதிலுமிருந்த விடுதலைஇயக்கங்கள், முற்போக்குச் சக்திகள், பாட்டாளி வர்க்கங்கள் ஆகியவை உறுதியான ஆதரவைத் தந்தன. இவ்வாறு, அந்த அய்க்கிய முன்னணி பொது எதிரிக்கு எதிரானதொரு அய்க்கிய முன்னணியாகிற்று. புரட்சிகரச்சக்திகளால் கட்டப்படும் உண்மையான அய்க்கிய முன்னணியின் தன்மை இவ்வாறுதான் இருந்து வருகிறது.

1973 ஆம் ஆண்டில் நடந்த சீ.பொ. கட்சியின் 10 ஆவது பேரவையும் கூட இதே போன்ற அய்க்கிய முன்னணி பற்றிய கண்ணோட்டத்தை முன்வைத்தது. உலக நிலைமையை மதிப்பிடுவதில் லெனினும் ஸ்டாலினும் மேற்கொண்ட நிலை இன்றும் பொருத்தமானதாகவே உள்ளது என்று 10 ஆவது பேரவையின் அறிக்கை கூறுகிறது: ''ஸ்டாலின் கூறினார்: 'லெனினியம் என்பது ஏகாதிபத்திய யுகத்தினதும் பாட்டாளிவர்க்கப் புரட்சியினதும் மார்க்சியமாகும்.' இது முற்றிலும் சரியானதே. லெனினின் மறைவுக்குப் பிறகு, உலக நிலைமை பெரும் மாற்றங்களுக்கு உள்ளாகியிருக்கிறது. ஆனால் யுகம் மாறவில்லை. லெனினியத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் காலவழக்கொழிந்தவையாகவில்லை; இன்றும் அது நமது சிந்தனைக்கு வழி காட்டக் கூடிய தத்துவ அடிப்படையாக நீடிக்கிறது.'' இதிலிருந்து தெளிவாவது என்னவெனில் லெனின், ஸ்டாலின் ஆகியோர் காலத்தில் உலகில் உள்ள அடிப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



படை முரண்பாடுகள் என வரையறுக்கப்பட்டவை இன்றும் கூட செல்லுபடியாகக் கூடியவையாக உள்ளன என்பது தான். 9 ஆவது பேரவையில் வரையறுக்கப்பட்ட அதே உலக முரண்பாடுகளைத்தான் 10 ஆவது பேரவையும் உறுதிப்படுத்தியது. இது எதைக் காட்டுகிறது என்றால், 1973 இல் நடந்த 10 ஆவது பேரவை வரை, உலகப் பொதுவுடைமை இயக்கத்தின் பொது மார்க்கம் பற்றிய சீ.பொ. கட்சியின் நிலைப்பாட்டில், அடிப்படை மாறுதல் ஏதும் ஏற்படவில்லை என்பதுதான். மாசேதுங்கின் தலைமையிலிருந்த சீ.பொ.க., எதிரி வர்க்கங் களையும் புரட்சிகர வர்க்கங்களையும் வேறுபடுத்திப்பார்த்து எப்போதுமே உலகப் பாட்டாளிவர்க்கத்துக்கான ஒரு புரட்சிகர மார்க்கத்தையே முன்வைத்தது என்பதாகும்.

ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்காவிலுள்ள மக்களின் புரட்சிகரப் போராட்டங்கள் ஒரு புதிய சக்தியாக எழுச்சி பெற்று வருகின்றன என்பதை சீ. பொ. க. புரிந்து கொண்டிருந்தது. அதனால் தான், இப் புதிய சக்திகளின் வளர்ச்சி பற்றி, சீ. பொ. கட்சியின் 9 ஆம், 10 ஆம் பேரவைகள் கூடுதலான அழுத்தம் தந்தன. ஏகாதிபத்தியத்துக்கும் உள் நாட்டுப் பிற்போக்குச் சக்திகளுக்கும் எதிராக இப் பிரதேசங் களில் மக்களும் புரட்சிகரச் சக்திகளும் நடத்தும் போராட்டத் துக்குரிய முக்கியத்துவத்தை சீ. பொ. க. வலியுறுத்தியது. இத்தகைய புரட்சிகரச் சக்திகளின் வளர்ச்சியின் காரணமாக, இந்நாடுகளில் உள்ள பிற்போக்கு அரசுத் தலைவர்களும் கூட, குறைந்தபட்சம் சொல்லளவிலேனும் ஏகாதிபத்திய - எதிர்ப்பு உணர்வை சில சமயம் வெளியிடும் கட்டாயத்துக்கு உள்ளாயினர். தோழர் சாருமஜூம்தார் இந்தப் புதிய நிலைமையை மதிப்பீடு செய்துள்ளார். ''இப்போதுமே அவர் களால், ஒரு உலகப்போரைக் கட்டவிழ்த்து விடுவதற்கான தம் சதித்திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாது. அவர்களால் இப்படிச் செய்ய முடியாமல் இருப்பதற்குக் காரணம், உலக முழுவதுமுள்ள மக்கள் போரின் வளர்ச்சி, இரண்டு வல்லரசு களின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் மக்கள் சீனத்தை ஐக்கிய நாடுகளின் சபைக்குக் கொண்டுவர வாக்களிக்க சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நாடுகளின் அரசாங்கங்கள் எடுத்த முடிவு, வல்லரசுகளின் அச்சுறுத்தல்களை எதிர்த்து இந்நாடுகள் 200 கடல் மைல்களுக்கு தம் கடல் எல்லைகளை நிர்ணயித்து நடைமுறைப்படுத்துதல், பெட்ரோல்-டீசல் எண்ணெய் வகைகளின் விலைகளை உயர்த்த இந்த நாடுகள் எடுத்த முடிவு ஆகியவையும் இது போன்ற இன்ன பிற

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



காரணங்களும் ஆகும்: இவ் வளர்ச்சிகள் முன்னுதாரணமற்ற வையும் உலகளாவிய ஏகாதிபத்திய - எதிர்ப்புப் போராட்டத்தின் உயிர் நாடியான பகுதியுமாகும். எனவே இந்த வளர்ச்சிகளை சீனம் வரவேற்கிறது. ஆனால் இதன் பொருள், இந்த சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நாடுகளில் தேசிய முதலாளி வர்க்கம் ஒரே நாளில் ஆட்சிக்கு வந்துவிட்டது என்பதல்ல. அரசு அதிகாரம் இன்னும் தரகு முதலாளி வர்க்கத்தின் கையிலேயே உள்ளது. ஆனால் தரகு முதலாளி வர்க்கங்களிடமும் கூட ஏகாதிபத்தியத்துடன் அவற்றுக்குள்ள முரண்பாடு வெளிப்படுகிறது. இன்று, தரகு முதலாளி வர்க்கமானது தனது வெளியுறவுக் கொள்கையில் தத்தம் நாட்டு மக்களுக்கும் ஏகாதிபத்தியத்துக்கும் இடையிலான முரண்பாட்டைப் பிரதிபலிக்குமாறு நிர்ப்பந்திக்கப்படுகிறது. இது உலக அரசியலில் முன்னுதாரணம் இல்லாத நிகழ்ச்சியாகும். மக்கள் சக்திக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் தமது நடவடிக்கைகளை எடுக்கும் கட்டாயத்துக்கு பிற்போக்குவாதிகள் இன்று உள்ளாக்கப்படுகிறார்கள்''. (திரிபுராத் தோழர்களுக்கு எழுதிய கடிதம் - ஏப்ரல் 1972, மலையாளத்திலிருந்து மொழியாக்கம் செய்யப்படுகிறது).

தெளிவான வர்க்க நிலைபாட்டின் அடிப்படையில் தோழர் சாருமஜூம்தார் செய்த இந்த மதிப்பீட்டை, சீனப் புரட்டல்வாதிகளின் 'மூன்றுலகக் கோட்பாட்டை' நியாயப்படுத்தப் பயன்படுத்துவதற்கு இந்தியாவிலுள்ள டெங்கின் ஏஜண்டுகள் செய்யும் முயற்சி கேலிக்குரியது. தோழர் சாரு சுட்டிக் காட்டியது என்னவென்றால் மக்களின் புரட்சிகரப் போராட்டம் வலுவடைவதன் காரணமாக தரகு முதலாளி வர்க்க அரசுகள் சில சமயம் ஒரு ஏகாதிபத்திய—எதிர்ப்பு நிலைப்பாட்டை மேற்கொள்ளும் கட்டாயத்துக்கு உள்ளாகின்றன என்பதுதான். டெங்கின் 'மூன்றுலகக் கோட்பாடு' புரட்சிகர மக்களின் அய்க்கியத்துக்குப் பதிலாக பிற்போக்கு அரசுகளின் அய்க்கியத்திற்கு அழுத்தம் தருகிறது. தோழர் சாருவின் நிலைப்பாடு இதற்கு நேர்மாறானது. உலக அளவில் உதயமாகி வரும் மூன்றாவது சக்தியின் வர்க்க உள்ளடக்கத்தை அவர் சரியாக வரையறுத்தார்: ''உலகில் மூன்றாவது சக்தி உதயமாவதுதான் இந்த மே நாளுக்குள்ள முக்கியத்துவமாகும். சோசலிச சக்திகள், ஏகாதிபத்திய சக்திகள் ஆகியவற்றுடன் கூடவே, எல்லா நாடுகளிலும் விடுதலை இயக்கங்கள் கூர்மையடைதலுடன் இன்று மூன்றாவது சக்தி உதயமாகி வருகிறது. இச் சக்தியுடன் ஒன்றுபடுவது பாட்டாளி வர்க்கத்தின் கடமையாகும்'' (மே 1, 1972 இல் ஆற்றிய உரை; மலையாளத்தி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விருந்து மொழி பெயர்க்கப்பட்டது). இதிலிருந்து தெளிவாவது என்னவெனில் தோழர் சாருமஜூம்தாரைப் பொறுத்த வரை உலகில் தோன்றிவரும் மூன்றாவது சக்தி என்பது எல்லா நாடுகளினதும் புரட்சிகர மக்களின் விடுதலைப் போராட்டமே யன்றி வேறல்ல என்பதாகும்.

தோழர் மாசேதுங்கின் தலைமையிலிருந்த சீனப் பொதுவுடைமைக் கட்சியானது, இத்தகைய ஒரு மூன்றாவது சக்தியின் உதயத்துக்குத் தந்த அங்கீகாரத்தை விரிவுபடுத்தி புரட்சிகர மக்களின் அய்க்கிய முன்னணிக்குப் பதிலாக பிற்போக்கு அரசாங்கங்களின் அய்க்கிய முன்னணி என்பதை முன்வைக்கவில்லை. வெவ்வேறு சமூக அமைப்புகள் கொண்ட நாடுகளுடன் வைக்கவேண்டிய உறவுகளை சர்வதேசப் பொதுவுடைமை இயக்கத்தின் பொதுமார்க்கத்துடன் ஒன்றாகச் சேர்த்துக் குழப்ப முயற்சித்த சந்தர்ப்பவாதிகளை மாசேதுங் எதிர்த்தார்; குருச்சேவ், அவனது கூட்டாளிகள் ஆகியோரின் அப்பட்டமான சந்தர்ப்பவாதத்தை எதிர்த்த மாசேதுங் தமது நெறிசார்ந்த நிலைப்பாட்டிலிருந்து ஒருபோதும் பிறழவில்லை. இந்தப் பின்னணியில்தான் உலகை மூன்று பகுதிகளாகப் பாகுபடுத்துதல் என்பது பற்றி மாசேதுங் கூறியவற்றை நாம் ஆராய வேண்டும். மாசேதுங்கின் இக்கூற்றுகளைத்தான், டெங்கும் அவனைப்பின்பற்றுபவர்களும், தமது 'மூன்றுலகக் கோட்பாட்டு'டன் மாசேதுங்கின் பெயரை இணைப்பதற்கான ஒரே அடிப்படையாக முன்வைக்கின்றனர். 1974 பிப்ரவரியில் ஆப்பிரிக்கத் தலைவர் கென்னத்கௌண்டாவுடன் உரையாடுகையில் மாசேதுங் கீழ்க்காணும் கருத்துகளைக் கூறியதாக டெங்கும் அவனைப் பின்பற்றுவர்களும் வழக்காடுகின்றனர் :

> ''எனதுகருத்தில், அமெரிக்காவும் சோவியத் யூனியனும் முதல் உலகமாகும்; ஜப்பான், அய்ரோப்பா, கனடா என்ற நடுப்பிரிவு இரண்டாம் உலகமாகும். நாம் மூன்றாம் உலகமாகும்.
>
> ''மூன்றாம் உலகம் ஒரு பெரும் மக்கட் தொகையைக் கொண்டுள்ளது. ஜப்பான் நீங்கலாக ஆசியா முழுவதும் மூன்றாம் உலகைச் சேர்ந்தது. ஆப்பிரிக்கா முழுவதும், லத்தீன் அமெரிக்காவும்கூட மூன்றாம் உலகத்தைச் சேர்ந்தவையே''

('மக்கள்தினசரி', நவம்பர் 1, 1977)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எப்போதோ அரிதாகக் கூறப்பட்ட இக்கூற்றைத்தவிர, மாசேதுங்கின் பெயரைத் தமது மூன்றுலகக் கோட்பாட்டுடன் இணைப்பதற்கு தம்மிடம் வேறு அதிகாரப்பூர்வமான ஆவணங் களோ, கட்டுரைகளோ இல்லை என இன்றைய சீனத்தலை மையே ஒத்துக்கொண்டுள்ளது. உலகை மூன்று பகுதிகளாகப் பாகுபடுத்துதல் என்ற மாசேதுங்கின் கூற்றுக்குரிய உண்மை யான பொருளைப் புரிந்துகொள்ள வேண்டுமானால், 1975 ஜனவரியில் நடந்த நான்காவது தேசிய மக்கள் பேரவையின் ஆவணங்களை நாம் ஆராயவேண்டியது தவிர வேறுவழியில்லை. மக்கள் பேரவையின் முதல் கூட்டம் பற்றி 1975 ஜனவரி 17ஆம் நாள் வெளியிடப்பட்ட பத்திரிகைச் செய்தி கூறுவதாவது: ''வெளியுறவு விவகாரங்களில் நாம் தலைவர் மாவோவின் புரட்சிகர மார்க்கத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும்; பாட்டளிவர்க்க சர்வதேசியத்தை உயர்த்துப் பிடிக்க வேண்டும் என்றும்; சோசலிச நாடுகளுடனும் உலகிலுள்ள ஒடுக்கப்படும் மக்களுடனும் ஒடுக்கப்படும் தேசங்களுடனும் நமது அய்க்கியத்தை வலுப்படுத்த வேண்டும் என்றும்; கூட்டுச் சேரவேண்டிய அனைத்துச் சக்திகளுடனும் கூட்டுச்சேர வேண்டும் என்றும்; தேசிய சுதந்திரத்தைப் பாதுகாக்கவோ அல்லது வென்றெடுக்கவோ மூன்றாம் உலகம் நடத்தும் போராட்டத்துக்கு உறுதியான ஆதரவு தரவேண்டும் என்றும்; அரசு இறைமையைப் பாதுகாத்து தேசியப் பொருளாதா ரத்தை வளர்க்க வேண்டும் என்றும்; வல்லரசுகளின் கட்டுப் பாடு, அச்சுறுத்தல்கள், தொல்லைகள் ஆகியவற்றுக்கு எதிராக இரண்டாம் உலக நாடுகளும் மக்களும் நடத்தும் போராட் டத்தை ஆதரிக்கவேண்டும் என்றும் பேரவை வலியுறுத்தியது''. வெளிவிவகாரங்கள் பற்றிய தலைவர் மாவோவின் புரட்சிகர மார்க்கம், பேரவையில் முன்வைக்கப்பட்ட அறிக்கையிலும், மேற்காணும் வகையிலேயே விளக்கப்பட்டது. சீனத்தின் வெளியுறவுக் கொள்கையை விளக்கி இவ்வறிக்கை கூறியதாவது: ''காலனியாதிக்கம், ஏகாதிபத்தியம், மேலாதிக்கவாதம் ஆகிய வற்றை எதிர்த்துப் போராடுவதில் முதன்மைச் சக்தியாக இருப்பது மூன்றாம் உலகமாகும். சீனம் மூன்றாம் உலகத்தைச் சேர்ந்த, வளர்ந்துவரும் சோசலிச நாடாகும்.'' மக்கள் பேர வையின் இந்த ஆவணங்கள், உலகை மூன்று பகுதிகளாகப் பிரித்தல், சீனத்தை மூன்றாம் உலகில் சேர்த்தல் என்பன சீனத் தில் அதிகாரபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்டவை என் பதைத் தெளிவுபடுத்துகின்றன.

இத்துடன், இந்த ஆவணங்கள் மற்றுமொரு விஷயத்தை யும் தெளிவுபடுத்துகின்றன. அது, ஒரு சோசலிச நாடு என்ற

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வகையில் சீனம் நடைமுறைப்படுத்த வேண்டிய வெளியுறவுக் கொள்கைக்கான மாவோவின் புரட்சிகர மார்க்கமாகும். ஒரு சோசலிச அரசின் வெளியுறவுக் கொள்கையின் ஒன்றுக்கொன்று தொடர்புள்ள ஒன்றிலிருந்து மற்றொன்று பிரிக்கப்படமுடியாத மூன்று அம்சங்களை நாம் ஏற்கனவே பார்த்தோம். அந்த மூன்று அம்சங்களும் தேசியப் பேரவையின் ஆவணங்களில் சேர்க்கப்பட்டுள்ளன. மேலும், பாட்டாளி வர்க்க சர்வதேசியத்திற்குத்தான் முதலிடம் தரப்பட்டுள்ளது. சோசலிச அரசுகளுடன் நெருக்கமான உறவு, ஒடுக்கப்பட்ட மக்கள், தேசங்கள் ஆகியவற்றுக்கு ஆதரவு என்பன விளக்கப்படுகின்றன. வெவ்வேறு சமூக அமைப்புகள் கொண்ட நாடுகளுடன் உறவுகளை ஏற்படுத்தல் என்ற பிரச்சனையில் தான், அந்நாடுகள் மூன்று உலகங்களாகப் பாகுபடுத்தப்படுகின்றன. சமாதான சகவாழ்வுக் கொள்கையை விளக்குகையில், நாம் வெவ்வேறு சமூக அமைப்புகள் கொண்ட நாடுகள் மூன்று வகைத்திணைகளாக 1963 இல் பாகுபடுத்தப்பட்டன என்பதை ஏற்கனவே சுட்டிக் காட்டியுள்ளோம். இப்படிப் பாகுபடுத்துதல், 1975 இல் மக்கள் பேரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் மேலும் தெளிவாக முன் வைக்கப்படுகிறது. ஒரு சோசலிச நாட்டின் வெளியுறவுக் கொள்கையின் ஒரு பகுதி என்ற வகையில் வேவ்வேறு சமூக அமைப்புகள் கொண்ட நாடுகளுடன் உறவுகளை ஏற்படுத்த, இத்தகைய பாகுபாட்டைச் செய்வது எப்போதும் சௌகரியமானதும் பயனுள்ளதுமாகும். உலகை இவ்வாறு மூன்று பகுதிகளாகப் பாகுபடுத்துவது என்பது, ஒரு வகையில் 1920 இல் மூன்றாவது அகிலத்தின் இரண்டாவது பேரவையில் லெனின் சமர்ப்பித்த அறிக்கையில் அவர் உலகை மூன்று பகுதிகளாகப் பாகுபடுத்தியதை ஒத்ததாகும். உலகிலுள்ள அடிப்படை முரண்பாடுகளைப் பரிசீலிக்கையில் இச்சித்திரத்தை நம் மனத்தில் வைத்திருக்க வேண்டும் என்று லெனின் நினைவூட்டினார். மாசேதுங் உலகை மூன்றாக வகைப்படுத்தியதும் கூட இதே அடிப்படையில் தான். தமது எதிர்ப் புரட்சித் தன்மை வாய்ந்த 'மூன்றுலகக் கோட்பாட்'டை நியாயப்படுத்துவதற்காக டெங்கும் அவனைப் பின்பற்றுவோர்களும், 1977 நவம்பர் 1 ஆம் நாள் 'மக்கள் தினசரி'யில் எழுதிய கட்டுரையில் லெனினின் இக்கூற்று அது சொல்லப்பட்ட பின்னணியிலிருந்து பிய்த்தெடுக்கப்பட்டு திரித்துக் கூறப்பட்டுள்ளது.

ஆனால், பாட்டாளி வர்க்கத்தின் உலகப் புரட்சிகரப் போர்த் தந்திரத்தை எடுத்துரைக்கையில், சர்வதேச வர்க்கச்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சக்திகளிடையே உள்ள பாகுபாட்டை லெனின் வலுயுறுத்திக் கூறினார். முதலாளிய நாடுகளிலுள்ள பாட்டாளி வர்க்கங்கள், காலனிய, அரைக் காலனிய நாடுகளிலுள்ள உழைக்கும் மக்கள் திரளினர் ஆகியோரை ஏகாதிபத்தியச் சக்திகள், எல்லா நாடுகளிலுமுள்ள அவர்களது கைக்கூலிகள் ஆகியவற்றிலிருந்து லெனின் வேறுபடுத்திக் காட்டினார், மாசேதுங் உலகை மூன்றாகப் பாகுபடுத்தியது, ஒரு சோசலிச அரசு தனது வெளியுறவுக் கொள்கைக்கு உகந்த வகையில் வெவ்வேறு சமூக அமைப்புகளைக் கொண்ட நாடுகளுடன் சமாதான சகவாழ்வுக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கான, ஒரு உதவிகரமான வழிகாட்டியே தவிர வேறல்ல. குருச்சேவும் அவனது கூட்டாளிகளும் சமாதான சகவாழ்வுக் கொள்கையை, முதலில் ஒரு சோசலிச அரசின் வெளியுறவுக் கொள்கையின் பொது மார்க்கமாகவும் பிறகு உலகப் பொதுவுடைமை இயக்கத்தின் பொதுமார்க்கமாகவும் விரிவு படுத்தியது போலவே, இப்போது டெங்கும் அவனது கூட்டாளிகளும் உலகை மூன்று பாகங்களாக வகைப்படுத்துதல் என்ற மாசேதுங்கின் கருத்தைத் திரித்து அதைப் பாட்டாளி வர்க்கத்தின் உலகப் புரட்சிகரப் போர்த் தந்திரமாக மாற்ற முயற்சி செய்கின்றனர்.

மாசேதுங்கின் தலைமையின் கீழ் சீ. பொ. க. செய்தது போல, உலகை மூன்று பகுதிகளாக வகைப்படுத்துதல் என்பதை, ஒரு சோசலிச அரசின் வெளியுறவுக் கொள்கையின் ஓர் பிரிக்க முடியாத அம்சம் என்ற வகையில் சமாதான சகவாழ்வுக் கொள்கையைச் சரியான முறையில் நடைமுறைப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படுமேயானால், அது உலகப் புரட்சிகர இயக்கத்தின் வளர்ச்சிக்கு உதவும். அந்த அளவுக்கு அது மட்டுப்படுத்தப்பட்டால்தான், சீனத்தை மூன்றாம் உலகத்தில் சேர்ப்பதற்குப் பொருள் ஏதும் இருக்க முடியும். 1920 இல், ஒடுக்கப்படும் தேசங்களோடு சோசலிச ரஷ்யாவை லெனின் சேர்த்தது போலவே, மாசேதுங் சீனத்தை மூன்றாம் உலகத்தில் சேர்த்தார். அதே வேளையில், உலகப் புரட்சிகரப் போர்த் தந்திரத்தைப் பொறுத்து வர்க்க உறவுகளைப் பரிசீலிக்கையில், சோசலிச நாடுகளை, மூன்றாம் உலகில் உள்ள காலனி, அரைக்காலனி நாடுகளுடன் சேர்த்துக் குழப்புவது மிக மிக அபாயகரமானதாகும்.

## 4. டெங்ஸியாவோ பிங்கின் 'மூன்றுலகக் கோட்பாடு'

சீனத்தில் டெங்ஸியாவோ பிங்கினால் பிரதிநிதித்துவம் செய்யப்படும் புரட்டல் வாதப்போக்கு, உள்நாட்டுக் கொள்கை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



களில் செய்ததைப் போலவே வெளியுறவுக் கொள்கையிலும் குருச்சேவைப் பின்பற்ற இயன்றதனைத்தையும் செய்ய முயற்சித்து வந்தது. இந்த நோக்கத்தை நிறைவேற்ற, டெங்கும் அவனது கூட்டாளிகளும் கிடைக்கக்கூடிய வாய்ப்புகள் அனைத்தையும் பயன்படுத்தினர். குருச்சேவ் லெனினின் கருத்தைப் புரட்டிக் கூறியது போல, இவர்களும் மாசேதுங் உலகை மூன்றாக வகைப்படுத்திக் கூறிய கருத்துகளை, உலகப் புரட்சிக்கான போர்த் தந்திரமாக மாற்ற முயன்றனர். 1974 ஏப்ரலில் ஐ. நா. சபையில் மூலப் பொருட்கள் பற்றி நடத்தப்பட்ட சிறப்பு மாநாட்டின், சீனப் பிரதிநிதிக்குழுவின் தலைவர் என்கிற முறையில் டெங் ஆற்றிய உரையில், உலகை மூன்றாக வகைப்படுத்துதல் என்பதற்குத் தவறான விளக்கம்தர முயற்சித்தான். இந்த மாநாட்டில், வெவ்வேறு சமூக அமைப்புகளைக் கொண்ட நாடுகளை ஆள்பவர்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். சீனத்தைப் பொறுத்தவரை, இத்தகையதொரு மாநாட்டில் ஒரு சோசலிச நாடு என்ற வகையில் அது செய்திருக்க வேண்டியது என்னவெனில், அதன் வெளியுறவுக் கொள்கையின் பிரிக்க முடியாத பகுதிகளில் ஒன்றான சமாதான சகவாழ்வுக் கொள்கையை அடிப்படையாகக் கொண்ட அணுகலை முன் வைத்தலாகும். டெங்கின் உரையிலும் இதுவே அடிப்படை அம்சமாகவும் இருந்தது என்பது உண்மைதான். ஆனால், சமாதான சகவாழ்வை அடிப்படையாக கொண்ட உறவுகளை மேற்கொள்வதன் மூலம் மூன்றாம் உலக நாடுகளை எதிர் கொண்ட பொருளாதார, அரசியல் பிரச்சனைகள் அனைத்தையும் தீர்க்க முடியும் என்ற கருத்தை நிலைநாட்ட முயற்சி செய்து டெங் வர்க்கப் போராட்டத்தின் முக்கியத்துவத்தை மறுக்க முயற்சித்தான். இது, உலகப் புரட்சியின் போர்த் தந்திரத்தின் இடத்தில் சமாதான சகவாழ்வுக் கொள்கையை வைக்க டெங் செய்த முயற்சியின் பகுதியே ஆகும்.

ஆயினும், முதலாளியப் பாதையாளர்களுக்கு எதிரான போராட்டம் சீனத்தின் முன்னெடுத்துச் செல்லப்பட்டதால் (இதன் விளைவாக, டெங் கட்சி, அரசு இரண்டிலும் எல்லா அதிகார நிலைகளிலிருந்தும் நீக்கப்பட்டான்) வெளியுறவுக் கொள்கைக்குத் தவறான விளக்கம் தர டெங் செய்த முயற்சிகள் வெற்றி பெறவில்லை. ஆனால் மாசேதுங்கின் மறைவுக்குப் பிறகு, ஹுவா-குவோ பெங்கும் அவரது கூட்டாளிகளும் இராணுவப் புரட்சியை நடத்தியதை அடுத்து, முதலாளியப் பாதையாளர்கள் அதிகாரத்தைக் கைப்பற்றி புதுப்பிக்கப்பட்ட

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வீரியத்துடன் உள்நாட்டு, வெளிநாட்டு விவகாரங்களில் டெங்கின் மார்க்கத்தை நடைமுறைப்படுத்தத் தொடங்கினர். 1977 ஜூலையில் டெங்ஸியாபிங் பழைய நிலைக்கு முழுமையாகத் திரும்பவும் கொண்டுவரப்பட்டபின், இப்போதுள்ள வடிவத்தில் 'மூன்றுலகக் கோட்பாடு' (அந்த ஆண்டு ஆகஸ்டில் நடந்த சீ. பொ. கட்சியின் 11ஆவது பேரவையில்) முன் வைக்கப்பட்டது.

ஹூவா குவோபெங் வழங்கிய அரசியல் அறிக்கையில் 'மூன்றுலகக் கோட்பாடு' பாட்டாளி வர்க்கத்தின் உலகப் புரட்சிகரப் போர்த் தந்திரம் என வர்ணிக்கப்பட்டது. அந்த அறிக்கையில் ஹூவாகுவோ பெங் கூறியதாவது: ''1974 இல் உலகை மூன்றாக வகைப்படுத்தி தலைவர் மாவோ முன்வைத்த ஆய்வுரை ஆழ்ந்த மற்றும் தொலைநோக்கு கொண்ட முக்கியத்துவம் வாய்ந்தது. வர்க்க ஆய்வு முறையைப் பயன் படுத்தி, அவர் நடப்புக்கால உலகிலுள்ள அடிப்படை முரண் பாடுகளின் வளர்ச்சியிலுள்ள மாற்றங்கள், அரசியல் சக்தி களிடையே உள்ள பாகுபாடு, வெவ்வேறு அரசியல் சக்திகள் புதிதாக அணிசேர்தல், சர்வதேசச் சூழலில் ஒவ்வொரு நாட்டினதும் அரசியல், பொருளாதார நிலை ஆகியவற்றை ஆய்வு செய்து, இதன் விளைவாக, உலகிலுள்ள இன்றைய போர்த் தந்திர நிலைமை பற்றிய இந்த விஞ்ஞான ரீதியான முடிவுக்கு வந்தார். சோவியத் யூனியன், அமெரிக்கா ஆகிய இரு மேலாதிக்க அரசுகள் தான் இன்றைய மிகப்பெரும் சர்வ தேசச் சுரண்டலாளர்களும் ஒடுக்குமுறையாளர்களும் ஆவர்; அவைதான் உலக மக்களின் பொது எதிரிகளாவர். மூன்றாம் உலக நாடுகள் தான் மிக மோசமான ஒடுக்குமுறையை அனுபவிப்பவையும் அதன் காரணமாக மிக வலுவான எதிர்ப் பைத் தருபவையுமாகும்; ஏகாதிபத்தியம், காலனியாதிக்கம், மேலாதிக்கம் ஆகியவற்றை எதிர்த்துப் போராடும் முதன்மைச் சக்திகள் இவையே. இரண்டாம் உலக நாடுகள் இரட்டைத் தன்மை கொண்டவை; ஓர் புறம் அவை, மூன்றாம் உலக நாடுகளை ஒடுக்கவும், சுரண்டவும் கட்டுப்படுத்தவும் செய் கின்றன; மற்றோர் புறமோ அவை இரண்டு மேலாதிக்கச் சக்திகளாலும் வேவ்வேறு அளவுகளில் கட்டுப்படுத்தப்பட்டு, அச்சுறுத்தப்பட்டு, தொல்லைக்குள்ளாக்கப்படுகின்றன. உலகை மூன்றாக வகைப்படுத்தும் தலைவர் மாவோவின் ஆய்வுரை தற்போதைய சர்வதேசப் போராட்டத்துக்கு ஒரு சரியான திசை மார்க்கத்தை வழங்கி, முதன்மையான புரட்சிகரச் சக்திகள், முதன்மையான பகைவர்கள், வென்றெடுக்கப்பட்டு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அய்க்கியப்படக்கூடிய இடைச் சக்திகள் ஆகியவை பற்றித் தெளிவாக வரையறுக்கிறது. இது, உலக அரங்கில் முதன்மை யான எதிரிகளுக்கு எதிரான வர்க்க போராட்டத்தில் மிகப் பரந்த அய்க்கிய முன்னணியைக் கட்டுவதற்கு அய்க்கியப்படக் கூடிய அனைத்துச் சக்திகளையும் அய்க்கியப்படுத்தும் ஆற்றலைச் சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்திற்கு வழங்குகிறது. இந்த போர்த்தந்திர ரீதியான விளக்கம் சர்வதேசப் பாட்டாளி வர்க்கம், உலகின் ஒடுக்கப்பட்ட மக்கள், தேசங்கள் ஆகியவற்றின் இன்றைய போராட்டங்கள், சோசலிசம், கம்யூனிசம் ஆகியவற்றின் வெற்றிக்கான போராட்டம் ஆகிய வற்றின் போர்த் தந்திரத் தேவைகளுக்கு உகந்ததாக உள்ளது. இன்றைய சகாப்தத்தில் உலகப் பாட்டாளி வர்க்கத்திற்கான சரியான போர்த் தந்திர, நடைமுறைத் தந்திர விளக்கமாக இருப்பதும் அதன் சர்வதேசப் போராட்டத்தில் அதன் வர்க்க மார்க்கமாக இருப்பதும் இந்த மூன்றுலகக் கோட்பாடுதான்.''

(பீகிங் ரெவ்யூ, எண் 35, 1977)

உண்மையில், மாசேதுங்கோ அல்லது அவரது தலைமையி லிருந்த சீ. பொ.கட்சியோ இத்தகையதொரு ஆய்வுரையை முன் வைக்கவே இல்லை. சமாதான சகவாழ்வு பற்றிய இருகொள்கை கள் பற்றி விளக்குகையில் 1964 இலிலேயே மாவோ, வெவ்வேறு சமூக அமைப்புகள் கொண்ட நாடுகளை வகைப்படுத்துவதைச் சுட்டிக் காட்டினார்; 1974 இல் அவர் செய்ததெல்லாம் இந்த வரையறுப்பை மேலும் துல்லியமானதாக்கியதுதான். ஆனால் இது - உலகை மூன்றாக வகைப்படுத்துதல் என்பது - சமாதான சகவாழ்வுக் கொள்கை சம்பந்தப்பட்ட பிரச்சனையே தவிர வேறல்ல. மேலும், 1975 இல் நடந்த நான்காவது மக்கள் பேரவையானது, வெளியுறவுக் கொள்கையின் ஒரு பகுதிதான் உலகை மூன்றாக வகைப்படுத்துதல் என்பதை அய்யத்துக்கு இட மின்றி தெளிவுப்படுத்தியது. மற்றோர் புறமோ உலகை மூன் றாக வகைப்படுத்துதல் என்பதை இழுத்து நீட்டி, உலகப் பாட்டாளி வர்க்கத்தின் போர்த்தந்திரமும் சர்வதேசப் போராட்டத்துக்கான வர்க்க மார்க்கமும் அதுவாகும் என்று கூறு கிறவர்கள் டெங் - ஹுவா கும்பலினர்தான். 11 ஆவது கட்சிப் பேரவையில்தான் இந்த வரையறுப்பு முன்வைக்கப்பட்டது. குருச்சேவ் எவ்வாறு, சமாதான சகவாழ்வு பற்றிய லெனினின் கொள்கையைக் கொச்சைப் படுத்திப் பயன்படுத்தினான் என்று விளக்கிய சீ.பொ. கட்சியின் விமர்சனங்கள் யாவும் டெங் - ஹுவா கும்பலுக்கும் பொருந்தும். இந்தப் புரட்டல்வாதக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கும்பல், சரியாக குருச்சேவ் பாணியில்தான், உலகை மூன்றாக வகைப்படுத்துதல் பற்றிய மாசேதுங்கின் கருத்தை பாட்டாளி வர்க்கத்தின் உலகப் போர்த்தந்திரமாக மாற்றத் தொடங்கியுள்ளது.

புதிய வடிவத்தில் முன்வைக்கப்படும் 'மூன்றுலகக் கோட்பாடு' பற்றிய அதிகார பூர்வமான விளக்கம் 'மக்கள் தினசரி' யில் 1977 நவம்பர் 1 ஆம் தேதி வெளியிடப்பட்ட கட்டுரையில் தரப்பட்டுள்ளது. இக்கட்டுரையில், மாசேதுங் உலகை மூன்றாக வகைப்படுத்தியது நாடுகளிடையே உள்ள உறவுகள் சம்பந்தப் பட்டது என்பதையும் தாம் உருவாக்கிய 'மூன்றுலகக் கோட்பாடோ' சர்வதேச வர்க்கப்போராட்டம் சம்பந்தமானது என்பதையும் புரட்டல்வாதிகள் மறைமுகமாக ஒப்புக்கொள்கின்றனர். அவர்கள் எழுதுகிறார்கள்: "தோற்றத்தில் தலைவர் மாவோவின் இக்கோட்பாடு இன்றைய உலகிலுள்ள நாடுகளுக்கிடையிலும் தேசங்களுக்கு இடையிலும் உள்ள உறவுகள் சம்பந்தப்பட்டதாக மட்டுமே இருக்கலாம்; ஆனால் சாரத்தில் அது ஒரு உலக அளவிலான இன்றைய வர்க்கப் போராட்டம் என்ற உயிர்நாடியான பிரச்சனைக்குச் சம்பந்தப்பட்டதாகும்'' இது, மூன்றுலகக் கோட்பாடு பற்றிய ஒரு நேர்மையான விளக்கத்தைத் தந்துவிடுகிறது. டெங்கும் அவனது கூட்டாளிகளும் கூறுவதற்கு மாறாக, **தோற்றத்தில்** மட்டுமல்லாது **சாரத்திலும்** கூட உலகை மூன்றாக வகைப்படுத்தும் மாவோவின் கருத்து நாடுகளுக்கிடையிலான உறவுகள் சம்பந்தப்பட்டது மட்டும் தான். இதற்கு மாறான முறையில் தான் கேடுகெட்ட புரட்டல் வாதிகள் 'மூன்றுலகக் கோட்பாட்டை' சர்வதேச வர்க்கப் போராட்டத்தின் போர்த்தந்திரக் கருத்துரையாக முன்வைக்கின்றனர்.

## 5. உச்ச நிலையடைந்துள்ள வர்க்க ஒத்துழைப்பு

உலகளாவிய வர்க்கப் போராட்டத்தில் தீர்மானகரமான காரணியாக இருப்பது ஒவ்வொரு நாட்டிலும் நடக்கும் உள்நாட்டு வர்க்கப்போராட்டமாகும். உள்நாட்டு வர்க்கப்போராட்டத்துக்கு உதவும் வகையில் மட்டுமே உலகளவில் அய்க்கிய முன்னணி கட்டப்பட வேண்டும். அதற்குமாறாக, உலகளவில் அய்க்கிய முன்னணி கட்டுதல் என்ற காரணங்காட்டி உள்நாட்டு வர்க்கப்போராட்டத்துக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் இருப்பது உண்மையில் வல்லரசுகளுக்கு எதிரான போராட்டத்திற்குக் குழிபறிப்பதாகும். 'மூன்றுலகக் கோட்பாடு' இதைத்தான் செய்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கிறது. உலகளவில் கட்டப்படும் அய்க்கிய முன்னணிதான்வல்லரசுகளுக்கு எதிரான போராட்டத்தின் முதன்மைக் கூறு என்று அது கூறுகிறது: இதன் நேரடி விளைவு என்னவெனில், உள்நாட்டு வர்க்கப்போராட்டம் இரண்டாம் நிலைக்குப் பின் தள்ளப்படுகிறது; அதாவது புறக்கணிக்கப்படுகிறது. சுருங்கக் கூறின், 'மூன்றுலகக்கோட்பாடு' திட்டமிடும் அய்க்கியமுன்னணி என்பது உலக அளவில் வர்க்க ஒத்துழைப்புக்கான கருவியாகி விடுகிறது.

'மூன்றுலகக் கோட்பாடு' முன்னெடுத்துச் செய்வது வர்க்க ஒத்துழைப்பா அல்லது வர்க்கப்போராட்டமா என்பதைப் புரிந்து கொள்ள 'மக்கள் தினசரி'யில் வெளிவந்த கட்டுரை தரும் விளக்கத்தைப் பாருங்கள்:

"இரண்டாம் உலகப்போருக்கு முன்பு ஒடுக்கப்பட்ட தேசங்களின் ஏகாதிபத்திய - எதிர்ப்புப் போராட்டத்துக்குப் பல சமயங்களில் வலுவான, தளராத உலகுதழுவிய ஆதரவு இருக்கவில்லை. இன்று விஷயங்கள் வேறு விதமாக உள்ளன. சோசலிச நாடுகள் உள்ளிட்ட மூன்றாம் உலக நாடுகளிடையே பரஸ்பர உதவி, ஆக்கிரமிப்புக்கு எதிரான சக்திகளிடையே (இவற்றில் சர்வதேசப் பாட்டாளி வர்க்கமும் அடங்கும்) பரஸ்பர உதவி ஆகியவை ஏகாதிபத்தியம், மேலாதிக்கம் ஆகியவற்றுக்கு எதிரான போராட்டத்தில் மூன்றாம் உலகநாடுகளும் மக்களும் முன்னைக் காட்டிலும் மேலும் செயலூக்கமிக்க பங்கை வகிப்பதைச் சாத்தியமாக்கியுள்ளன. **தமது கரங்களிலுள்ள அரசு அதிகாரத்தைப் பிரயோகிப்பதன் மூலம்**, சுதந்திரமடைந்த மூன்றாம் உலக நாடுகள் கடந்த காலத்தில் இருந்தவற்றைக் காட்டிலும் மேலும் பரந்த அரங்கங்களையும் கூடுதலான சாதனங்களையும் தம் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்குப் பெற்றுள்ளனர்; அவற்றால் தமது கூட்டுறவை உறுதியாக வளர்த்துக் கொண்டு கூட்டு நடவடிக்கையை எடுக்க முடியும்" (அழுத்தம் நம்முடையது). மூன்றாம் உலக நாடுகளின் போராட்டம் என்று சீனப்புரட்டல்வாதிகள் எதைக்கருதுகிறார்கள் என்பது பகல் வெளிச்சம் போல் தெளிவாக உள்ளது. மூன்றாம் உலக நாடுகளிடையே உள்ள பரஸ்பர ஆதரவு என்று அவர்கள் கூறுவதன் பொருள், இந்த நாடுகளில் அரசு அதிகாரத்தைக் கையாள்பவர்களின் அய்க்கியம், அவர்களிடையே உள்ள பரஸ்பர ஆதரவு என்பதுதான்.

மூன்றாம் உலக நாடுகளில் உண்மையில் அரசு அதிகாரத்தைக் கையாள்பவர்கள் யார்? மூன்றாம் உலக நாடொன்றுக்கான எடுத்துக்காட்டுக்கு நாம் இந்தியாவை எடுத்துக் கொள்வோம். 1947 இல் பிரிட்டிஷார் தமது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நேரடிக் காலனியாட்சிக்கு முடிவு கட்டினாலும், இந்தியா இன்றும் வெவ்வேறு ஏகாதிபத்தியச் சக்திகளின் ஆதிக்கத்தி லுள்ள அரைக்காலனி நாடாகவே நீடிக்கிறது. இந்தியாவின் ஆளும் வர்க்கங்கள்-தரகு அதிகார வர்க்க முதலாளிகள், நிலப் பிரபுக்கள்-ஏகாதிபத்தியம், சமூக ஏகாதிபத்தியம் ஆகியவற்றின் கையாட்கள் ஆகியோராவர். ஏகாதிபத்தியத்துக்கு அடிமைப் பட்டிருப்பதற்கு முடிவு கட்டி இந்தியாவின் தேசிய சுதந்திரத் தைத் திரும்பப் பெறுவதில் உண்மையான அக்கறை இந்த வர்க் கங்களுக்கு இல்லை. இதன் பொருள், இந்தியா ஒரு காலனி என்ற நிலையில் இருக்கிறது என்பதோ இந்திய ஆளும் வர்க்கங் களுக்கு ஏகாதிபத்தியத்துடன் எந்த முரண்பாடும் முற்றிலும் இல்லை என்பதோ அல்ல. ஒரு குறிப்பிட்ட அளவுக்கு, ஒரு அரைக்காலனியின் உள்நாட்டு ஆளும் வர்க்கங்களுக்கு ஒரு சுதந்திர வாழ்வு இருக்கிறது; ஆனால் இந்த வரம்புக்குட்பட்ட சுதந்திரத்தை முழுமையான தேசிய சுதந்திரமாக வளர்க்கும் அக்கறை அவர்களுக்கு இல்லை. மாறாக, வேவ்வேறு ஏகாதி பத்தியங்களுடன் கூட்டு சேர்ந்து மேன்மேலும் பேரம் பேசுவதே அவர்களது முயற்சியாக உள்ளது. மேலும், தோழர் சாருமஜும்தார் சுட்டிக்காட்டியது போல, அண்மையில், போராடும் மக்கள் சக்தியின் வளர்ச்சியின் காரணமாக குறைந்த பட்சம் வாயளவிலேனும் ஒரு வகை ஏகாதிபத்திய-எதிர்ப்புத் தன்மையை வெளியிடுமாறு ஆளும்வர்க்கங்கள் நிர்ப்பந்திக்கப்படு கின்றன. இருந்தபோதிலும் இதிலிருந்து நாம் இந்த ஆளும் வர்க்கங் கள் தேசிய நலன்களைப் பாதுகாப்பவை என்ற முடிவுக்கு வந்து விடக்கூடாது; தவறாமல் அவர்கள் தம் அடிப்படைத் தரகுத் தன்மையைத் தக்க வைத்துக் கொண்டே வருகின்றனர். இந் திய மக்களின் ஏகாதிபத்திய-எதிர்ப்புப் போராட்டத்துக்கு அவர்களால் ஒரு போதும் தலைமை தரமுடியாது. எந்த ஏகாதிபத்தியத்துக்கும் **அடிமைப்படாது** இந்திய தேசியச் சுதந் திரத்தையும் விடுதலையையும் பாதுகாக்கக்கூடிய ஒரு அரசு இந்தியாவில் தோன்ற வேண்டுமானால், புதிய ஜனநாயகப் புரட்சியானது அது வெற்றிகாணும் வரை நடத்தப்பட வேண் டும்; இதற்கு, தற்போதைய ஆளும் வர்க்கங்கள், அவர்களது ஏகாதிபத்திய, சமூக-ஏகாதிபத்திய எஜமானர்கள் ஆகியோர் முற்றாகத் தோற்கடிக்கப்படும் வரை நீண்டகாலப் புரட்சிகரப் போராட்டம் நடத்த வேண்டும். ஏறக்குறைய இதே நிலைமை தான் ஆசியாவிலுள்ள அரைக்காலனி நாடுகள் மிகப் பெரும் பாலானவற்றிலும் நிலவுகிறது. கிட்டத்தட்ட எல்லா லத்தீன் அமெரிக்க நாடுகளிலும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நேரடி யான அல்லது மறைமுகக் கட்டுப்பாட்டின் கீழுள்ள இராணுவ

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சர்வாதிகார ஆட்சிகளே அதிகாரத்தில் உள்ளன. ஆப்பிரிக்காவிலுள்ள குறை வளர்ச்சி நாடுகளும் கூட ஏகாதிபத்திய, சமூக ஏகாதிபத்திய சுற்றுப் பரப்புக்குள் இருக்கின்றன.

மெய் நிலைமை இப்படியிருக்கையில், மூன்றாம் உலகத்திலுள்ள அரசுகளில் பெரும்பாலானவை ஏகாதிபத்திய-எதிர்ப்புப் போராட்டத்துக்குத் தலைமை வழங்கும் எனக் கூறுவது, மூன்றாம் உலக நாட்டு மக்களை ஏமாற்றும் முயற்சியே தவிர வேறல்ல. உண்மையில், 'மூன்றுலகக் கோட்பாடு', மூன்றாம் உலக நாடுகளிலுள்ள ஒடுக்கப்பட்ட மக்கள் புரட்சிகரச் சக்திகள் ஆகியோரின் கடமை, "அவர்களது" அரசுகளின் தலைவர்களுக்கு - ஏகாதிபத்தியம் சமூக—ஏகாதிபத்தியம் ஆகியவற்றின் அடிமைகளுக்கு (இவர்கள் பழைய வகை அடிமைகளோ அல்லது புதிய வகை அடிமைகளோ ஆவர்)- ஆதரவு வழங்குவதாகும் என்று வாதிடுகிறது. மூன்றாம் உலக அரசுகளை அந்த நாடுகளின் பிரதிநிதிகள் என மதிப்பிட்டு விட்டு, அதன் பிறகு அந்த அரசுகளின் மூலமாக அந்த நாடுகளின் அய்க்கிய முன்னணி ஒன்று ஏற்படுத்த வேண்டும் என்று அறைகூவல் விடுத்த பின்னர், இந்த நாடுகளில் வர்க்கப் போராட்டங்கள் பற்றிய அவர்கள் பிதற்றுவதற்கு என்ன முக்கியத்துவத்தை நாம் தர முடியும்? வர்க்கப் போராட்டத்தை உதட்டளவில் ஆதரித்துவிட்டு, நடைமுறையில் வர்க்க ஒத்துழைப்புக்குச் சீராட்டுவதுதான் இந்த 'மூன்றுலகக் கோட்பாடு' என்பதைக் கண்ணுள்ளவர்கள் பார்க்கத் தவறமாட்டார்கள். இந்த 'கோட்பாட்'டின் உண்மையான சாரம் வர்க்க ஒத்துழைப்புத்தான்.

மூன்றுலகக் கோட்பாட்டின் இந்த நிலைப்பாடு புதிய ஜனநாயகப் புரட்சியின் சாரத்துக்கு நேர் எதிரானது. மார்க்சியம் லெனினியம் - மாசேதுங் சிந்தனையை உயர்த்துப் பிடிப்பவர்கள் அனைவரும், மாசேதுங்கால் வளர்த்தெடுக்கப்பட்ட புதிய ஜனநாயகப் புரட்சிப் பாதைதான் மூன்றாம் உலக நாடுகளின் புரட்சிப் பாதையுமாகும் என்பதைப் புரிந்து கொண்டுள்ளனர். அக்டோபர் புரட்சிக்குப் பிந்திய புதிய சகாப்தத்தில், காலனி, அரைக்காலனி நாடுகளில் ஏகாதிபத்திய - எதிர்ப்பு நிலப்பிரபுத்துவ - எதிர்ப்புப் புரட்சி, பூர்சுவாவர்க்கங்களின் தலைமையில் நடக்காது என்பதையும், ஏகாதிபத்திய - எதிர்ப்புப் போராட்டம் புதிய ஜனநாயகப் புரட்சியின் மூலமே நிறைவேற்றப் பெறும் என்பதையும், புதிய ஜனநாயகப் புரட்சியானது

மா—3

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பாட்டாளிவர்க்கத்தின் தலைமையில் எல்லாப்புரட்சிகரவர்க்கங் களையும் ஒன்றிணைக்கிறது என்பதையும் புதிய ஜனநாயகப் புரட்சியின் தத்துவமும் நடைமுறையும் நமக்குப் போதிக் கின்றன. எந்தெந்த இடங்களில் பாட்டாளி வர்க்கத்தின் தலைமையில் ஏகாதிபத்திய – எதிர்ப்புப் போராட்டம் வெற்றி யடையவில்லையோ அங்கு வெவ்வேறு அளவுகளில் பல்வேறு ஏகாதிபத்தியங்களுக்குச் சேவை செய்யும் தரகு – அதிகாரவர்க்க முதலாளிவர்க்கங்களும் நிலப்பிரபுக்களும் அதிகாரத்தை எடுத்துக் கொண்டுள்ளனர். இந்த ஆளும் வர்க்கங்களையும் அவர்களது எஜமானர்களையும் துடைத்தெறிய பாட்டாளி வர்க்கத்தின் தலைமையின் கீழ் நடத்தப்படும் உள்நாட்டுப் போரும் தேசியப் போரும் வெற்றி பெற்றால்தான், மூன்றாம் உலக நாடுகள் ஏகாதிபத்திய நுகத்தடியிலிருந்து விடுதலை பெற்றவையாக முடியும். ஆனால் 'மூன்றுலகக்கோட்பாடா'னது மூன்றாம் உலக நாடுகளில் இப்போதிருக்கிற ஆளும் வர்க்கங் களின் தலைமையின் கீழ் ஏகாதிபத்திய - எதிர்ப்புப் போராட் டத்தை நடத்த முடியும் என்ற கருத்தை வைப்பதன் மூலம், புதிய ஜனநாயகப் புரட்சியை ஒரேயடியாகக் கைவிட்டு விட்டு, இந்த நாடுகளில் பாட்டாளிவர்க்கத் தலைமையின் கீழ் வளர்ந்து வரும் புரட்சிகரப் போரட்டத்தின் மீது முதுகுக்குப் பின்புற மிருந்து குத்துகிறது.

'மூன்றுலகக் கோட்பாட்'டின் வர்க்க ஒத்துழைப்புச் சாரத்தை எடுத்து வழங்கும் 'மக்கள் தினசரி' மேலும் கூறுவதா வது: ''மூன்றாம் உலக நாடுகளுக்குள்ளேயே வேவ்வேறு அரசி யல் சக்திகளிடையே போராட்டங்கள் இருக்கின்றன என்பது உண்மைதான். சிலர், தேசிய ஜனநாயகப் புரட்சியை இறுதி வரை நிறைவேற்றுவதில் உறுதியாக நிற்கும் புரட்சியாளர்கள்; வேறு சிலர் முற்போக்குவாதிகளும் பல்வேறு வகையான நடு நிலையாளருமாவர்; ஒரு சிலர் பிற்போக்குவாதிகளாவர். ஏகாதிபத்தியம் சமூக ஏகாதிபதத்தியம் ஆகியவற்றின் கையாட் கள் சிலரும் கூட உள்ளனர். வர்க்கங்கள் இருக்கும் வரை, ஒரு பாட்டாளி வர்க்கமும் ஒரு விவசாயிவர்க்கமும் ஒரு சிறு முதலாளிவர்க்கமும் பல்வேறு பிரிவுகளைக் கொண்டதொரு முதலாளி வர்க்கமும் நிலப் பிரபுத்துவ மற் றும் இதர சுரண்டும் வர்க்கங்களும் இருக்கும் வரை, இத் தகைய நிகழ்ச்சிப் போக்குகள் தவிர்க்க முடியாதனவாக இருக்கும். ஆயினும் இந்தச் சிக்கலான நிலைமையானது, மூன் றாம் உலக நாடுகள்தான் ஏகாதிபத்தியம், மேலாதிக்கம் ஆகிய வற்றுக்கு எதிரான முதன்மைச் சக்தி என்ற அடிப்படை உண்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மையைப் பாதிப்பதில்லை. மூன்றாம் உலக நாடுகளிலுள்ள அரசியல் நிலைமைகளில் என்ன வேறுபாடுகள் இருந்தாலும், அவ் வேறுபாடுகளால் ஓர் புறம் ஏகாதிபத்தியம், மேலாதிக்கம் ஆகியவற்றுக்கும் மற்றோர் புறம் மூன்றாம் உலகநாடுகள், மக்கள் ஆகியோருக்கும் இடையே உள்ள அடிப்படை முரண்பாட்டை மாற்ற முடியாது'' (அழுத்தம் நம்முடையது).

மூன்றாம் உலகநாடுகள் பெரும்பாலானவற்றில் அரசியல் அதிகாரத்தை வைத்திருப்பவர்கள் ஏகாதிபத்தியம், மேலாதிக்கச் சக்தி ஆகியவற்றின் ஏஜண்டுகள்தாம் என்பது மறுக்க முடியாத ஒரு உண்மை. இந்தச்சூழ்நிலைமைகளில், ஏகாதிபத்தியம், சமூகஏகாதிபத்தியம் ஆகியவற்றின் இந்தக் கைக்கூலிகள் தான் உலக அரங்கில் பிரவேசித்து இந்நாடுகளைப் பிரதிநிதித்துவம் செய்கின்றனர். ஆயினும் 'மூன்றுலகக் கோட்பாட்டா'ளர்களின் கண்களுக்கோ, இந்த ஏஜண்டுகள் பற்றிய பிரச்சனை மிகுந்த முக்கியத்துவமுடையதாகத் தெரியவில்லை. இந்த நாடுகளில் ''ஏகாதிபத்தியத்தின் அல்லது சமூக ஏகாதிபத்தியத்தின் ஏஜண்டுகள் சிலர் கூட இருக்கிறார்கள்'' என்று 'மூன்றுலகக் கோட்பாட்டா'ளர்கள் கூறுகின்றனர்: இக்கூற்றில் பொதிந்துள்ள பொருள் என்னவெனில் இந்த ஏஜண்டுகளின் பாத்திரம் முற்றிலும் பொருட்படுத்தத் தேவையில்லாதவை என்பதாகும். இம்முறையில் இந்த 'மூன்றுலகக் கோட்பாடு', மூன்றாம் உலக நாடுகளை ஏகாதிபத்தியமும் சமூக ஏகாதிபத்தியமும் கொள்ளையடிப்பதற்கான தயாரிப்புகளைச் செய்து கொடுத்து இந்த நாடுகளில் மக்களின் தாக்குதல்களிலிருந்து உண்மையான எதிரிகளைப் பாதுகாப்பதில், இந்த ஏஜண்டுகள் வகிக்கும் தீர்மானகரமான பாத்திரத்தை மூடிமறைக்கிறது. ஒவ்வொரு நாட்டிற்கு முள்ளே உள்நாட்டுப் பகைவர்களுக்கும் மக்களுக்குமிடையே உள்ள உண்மையான முரண்பாட்டை மூடிமறைப்பதன் மூலம் மூன்றுலகக் கோட்பாட்டாளர்கள் அப்பட்டமான வர்க்க ஒத்துழைப்புக் கொள்கையைப் பின்பற்றுமாறு உலகின் ஒடுக்கப்பட்ட மக்களைக் கேட்கிறார்கள். இது இன்று சர்வதேசப் பொதுவுடைமை இயக்கத்தால் பின்பற்றப்படும் புரட்சிகர வர்க்க மார்க்கத்துக்கு நேர் எதிரானது.

இந்த வர்க்க ஒத்துழைப்புக் கொள்கையைப் பின்பற்றுமாறு 'மூன்றுலகக் கோட்பாடு' மூன்றாம் உலக நாட்டு மக்களை மட்டும் கேட்கவில்லை. மூன்றுலகக் கோட்பாட்டாளர்களின் கருத்தில், இன்று இரண்டாம் உலக நாடுகள் எதிர்கொள்ளும் முதன்மைப் பிரச்சனைகள், இரண்டு வல்லரசுகளின் ஆக்கிர

www.tamilarangam.net



மிப்பிலிருந்து—குறிப்பாக சோவியத் சமூக ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பிலிருந்து—அவை தமது தேசிய சுதந்திரத்தைப் பாதுகாத்துக்கொள்வதுதான். தேசியப்போரை நியாயப்படுத்தி ஏங்கல்ஸும் லெனினும் எழுதிய கட்டுரைகளிலிருந்து சம்பந்தா சம்பந்தமில்லாத வகையில் சில மேற்கோள்களைப் பிய்த்தெடுத்துக்காட்டி, ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புக்கு எதிரான தேசியப் போரையே இந்த நாடுகள் எதிர்கொண்டுள்ளன என்று இந்த மூன்றுலகக் கோட்பாட்டாளர்கள் வாதிடுகின்றனர். ஏகாதிபத்தியங்களுக்கிடையிலுள்ள போட்டியின் காரணமாக உருவாகும் போர்களை தேசியப்போர்களாகச் சித்தரித்து, இத்தகைய போர்களுக்குப் புரட்சிகரச் சக்திகள் ஆதரவு கொடுத்துத்தீரவேண்டும் என்று வழக்காடுவது இரண்டாம் அகிலத்திலிருந்த புரட்டல்வாதிகளின் விசேடப் பண்பாகும். (இதை லெனின் ஈவிரக்கமற்ற முறையில் அம்பலப்படுத்தினார்). முதலாம் உலகப் போரின்போது லெனினின் தலைமையிலிருந்த போல்ஷ்விக்குகளால் முற்றாகத் தோற்கடிக்கப்பட்ட அதே சந்தர்ப்பவாதக் கொள்கையைத்தான், இன்று மூன்றுலகக் கோட்பாட்டாளர்கள் அலங்கரித்து புரட்சிகரச் சக்திகளின் மேல் திணிக்க முயல்கிறார்கள்.

முதல், இரண்டாம் உலகங்களிலுள்ள பாட்டாளிவர்க்க இயக்கங்களைப பொறுத்தவரை, இததகைய நிலைப்பாட்டின் நடைமுறை ரீதியான விளைவு கீழ்வருமாறு: ''இந்த நாடுகளில் உடனடியாக அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான புரட்சிகரச் சூழ்நிலை ஏதும் இல்லை'' ('மக்கள் தினசரி' கட்டுரை) இந்தச் சூழலில், இநதநாடுகளிலுள்ள புரட்சிகர இயக்கததின் கடமை, மூன்றாம உலக நாடுகளுக்கு ஆதரவு தருதல்தான் என்று மூன்றுலகக் கோட்பாடு சொல்கிறது. ''மூன்றாம் உலக நாடுகளுக்கு ஆதரவு தருதல்'' என்பதற்கு என்னபொருள் எனபதை நாம் கண்டோம. மூன்றாம் உலக நாடுகளிலுள்ள புரட்சிகரச் சக்திகள் (ஏகாதிபததியத்தை எதிர்ப்பது என்ற பெயரால) தத்தம் நாடுகளிலுள்ள அரசுகளை ஆதரித்தாக வேண்டும் என்று 'மூன்றுலகக் கோட்பாடு' கூறுகிறது; அதேபோல வளர்ச்சியடைந்த முதலாளிய நாடுகளிலுள்ள பாட்டாளி வர்க்கங்களும் அரசியல் அதிகாரத்துக்கான போராட்டத்தைக் கைவிட்டு (தேசிய சுதந்திரம், தேசியப் பாதுகாப்பு என்ற பெயரால்) தத்தம் நாடுகளிலுள்ள ஒடுக்குமுறை அரசை ஆதரிக்கவேண்டும் என்று இக்கோட்பாடு வழக்காடுகிறது. மேலும், வல்லரசுகளுக்கிடையில் சோவியத் சமூக ஏகாதிபத்தியம் தான் மிகவும் ஆபத்தானது என்பதால், தொழிலாளி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வர்க்கமானது சோவியத் சமூக ஏகாதிபத்தியத்துக்கு எதிராகத் ''தமது'' அரசு அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் உருவாக்கிக் கொள்ளும் கூட்டையும்கூட ஆதரித்துத் தீரவேண்டும் என்றும் இம் 'மூன்றுலகக் கோட்பாடு' வாதிடுகிறது. வேறு சொற்களில் கூறுவதனால், மேற்கு அய்ரோப்பிய நாடுகளிலுள்ள தொழிலாளி வர்க்க இயக்கமானது, வார்ஸா ஒப்பந்தத்துக்கு (இது சோவியத் சமூக - ஏகாதிபத்தியத்தின் தலைமையில் உள்ளது) எதிராக வடஅட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பு என்பதனை (இது அமெரிக்க ஏகரதிபத்தியத்தின் தலைமையில் உள்ளது) ஆதரிக்க வேண்டும் என்று 'மூன்றுலகக் கோட்பாடு' கருதுகிறது.

இவை எல்லாவற்றிலுமிருந்து ஒரு விஷயம் தெளிவாகப் புலப்படுகிறது. ஒத்துழைப்புகளுக்கு மூன்று உலகக் கோட்பாடு ஏற்படுத்தித்தரும் சாத்தியப் பாடுகள் எல்லையற்றவை: அவை காலனி, அரைக்காலனி நாடுகளுடன் மட்டுப்படுபவையல்ல. வளர்ச்சியடைந்த முதலாளிய நாடுகளில் இந்தக் 'கோட்பாடானது', தொழிலாளி வர்க்க இயக்கங்கள் ஆளும் வர்க்கங்களோடு மட்டுமில்லாமல் வல்லரசுகளுடனும் கூட வர்க்க ஒத்துழைப்புகளை ஏற்படுத்திக் கொள்ளும் சாத்தியப் பாடுகளை முன்னுக்குத் தள்ளியிருக்கிறது. வர்க்க ஒத்துழைப்பை உலகு தழுவியதாக்குவதில் மூன்றுலகக் கோட்பாட்டாளர்கள் குருச்சேவையும் விஞ்சிவிட்டனர்!

## 6. வர்க்க ஒத்துழைப்புக்கான ஒரு கருவியாக அய்க்கிய முன்னணி

'மூன்றுலகக் கோட்பாட்டின்' மூலைக் கல்லாக அமைகின்ற அய்க்கிய முன்னணி என்ற பிரச்சனையானது, உண்மையில் இந்த உலகு தழுவிய வர்க்க ஒத்துழைப்பை நடைமுறைப் படுத்துவதற்கான ஒரு நிபந்தனையாக முன் வைக்கப் பட்டுள்ளது. ஒவ்வொரு வரலாற்றுக் கட்டத்திலும் மார்க்சிய-லெனினியர்கள், திட்டவட்டமான வர்க்க ஆய்வின் அடிப் படையில் அய்க்கிய முன்னணியைக் கட்டுகின்றனர். எடுத்துக் காட்டாக, புதிய ஜனநாயகப் புரட்சிக் கட்டத்தின் போது தொழிலாளர்-உழவர் கூட்டணியை அடிப்படையாகக் கொண்டு சிறு முதலாளிவர்க்கம், இதர இடைத்தட்டு அடுக்குகள், தேசிய முதலாளிகள் ஆகியோரைக் கொண்டு உருவாக்கப்படும் அய்க்கிய முன்னணியானது தெளிவான வர்க்க ஆய்வினை அடிப்படையாகக் கொண்ட அய்க்கிய முன்னணியாகும்; ஏகாதி

www.tamilarangam.net



பத்தியத்துக்கு எதிரான போராட்டத்தின் உள்நாட்டுப் போர்க் கட்டத்தில், உள்நாட்டுப் பகைவர்களான ஆளும் வர்க்கங்களை, மார்க்சிய-லெனினியர்கள் ஒரு போதும் அய்க்கிய முன்னணியில் சேர்க்கமாட்டார்கள். ஏகாதிபத்தியம் நேரடியான இராணுவ ஆக்கிரமிப்பைச் செய்துள்ள நேரத்திலும் கூட, அந்த ஏகாதிபத்தியத்தின் நலனுக்கான கேவலமான செயல்களில் ஈடுபட்டுள்ள இந்த உள்நாட்டுப் பகைவர்களைத் தனிமைப்படுத்துவதன் மூலமாக மட்டுமே அய்க்கிய முன்னணியை விரிவுபடுத்த முடியும். மேலும், இறுதி ஆய்வில் இத்தகைய அய்க்கிய முன்னணியின் தன்மையைத் தீர்மானிப்பது ஒவ்வொரு கால கட்டத்திலும் ஒவ்வொரு நாட்டிலும் நிலவுகிற திட்டவட்டமான நிலைமைகளேயாகும். இத்தகைய அய்க்கிய முன்னணிகளுக்கு அடிப்படையாகச் செயல்படுவது வர்க்கக் கண்ணோட்டம்தான். இருப்பினும், சில குறிப்பிட்ட போர் நிலைமைகளிலோ, அல்லது அதேபோன்ற நெருக்கடி நிலைமைகளிலோ, சில சமயங்களில் பகைவனுடன் சமரசம் கொள்ள வேண்டிய (இது வர்க்கக் கண்ணோட்டத்தின் அடிப்படையிலிருந்து உருவாகும் சமரசம் அல்ல, திட்டவட்டமான சூழ் நிலைமைகளின் காரணமாக மேற்கொள்ளப்பட வேண்டிய சமரசம் ஆகும்) நிலை ஏற்படலாம்; அல்லது வேறு சில நிலைமைகளில், தற்காலிகமான குறுகிய காலக் கூட்டணியை உருவாக்க வேண்டியதுமிருக்கலாம். ஆனால், இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட எந்தவொரு தற்காலிகமான நடவடிக்கையும் மார்க்சிய—லெனினியர்களின் நீண்ட கால, போர்த் தந்திர அணுகலுக்கான அடிப்படையாக அமையாது. இதற்கு மாறாக, போர்த் தந்திர அய்க்கிய முன்னணி என்பது வர்க்க ஆய்வின் அடிப்படையிலேயே கட்டப்படுகிறது. நெருக்கடி நிலைமைகளின் கீழ் உருவாக்கப்படும் குறுகியகால சமரசங்களும் கூட்டணிகளும் நடைமுறைத் தந்திரம் சார்ந்தவை மட்டுமே. இந்த இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து இரண்டுக்குமிடையே உள்ள எல்லைக் கோட்டை அழித்து விடுவது என்பது சந்தர்ப்பவாதக் கண்ணோட்டத்தின் தெளிவான புலப்பாடுதான். 'மூன்றுலகக் கோட்பாட்டின்' தரத்தை இத்த சந்தர்ப்பவாதத்திலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

அய்க்கிய முன்னணி கட்டுதல் என்ற பிரச்சனையைப் பொறுத்தவரை இரண்டு தவறான போக்குகள் நிலவுகின்றன. எதிரி வர்க்கத்தைச் சேர்ந்த எவரொருவருடனும் எச்சூழ்நிலைமையிலும் நாம் ஓர் அய்க்கிய முன்னணியையோ அல்லது கூட்டணியையோ உருவாக்கிக் கொள்ளக்கூடாது என்பது ஒரு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



போக்கு. இது இடதுசாரிப் பிறழ்வு. ப்ரெஸ்ட்-லிடோவ்ஸ்க் ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவது எதிரியிடம் சரணடைவதாகும் என்றுகூறி இந்த ஒப்பந்தத்தை ட்ராட்ஸ்கியும் அவரது ஆதரவாளர்களும் எதிர்த்தது இடதுசாரிப் பிறழ்வு ஆகும். (அக்டோபர் புரட்சியை அடுத்து உருவாகிய குறிப்பிட்ட நிலைமைகளில் புதிய புரட்சிகர அரசாங்கம் ஜெர்மனியுடன் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டியிருந்தது). ஒட்டுமொத்தமாகப் பார்கையில் 'மூன்றுலகக் கோட்பாடு' பற்றிய அல்பேனியத் தொழிலாளர் கட்சியின் விமர்சனம் இத்தகைய இடதுசாரிப் பிறழ்வு நிலைப்பாட்டிலிருந்து வருவதாகும். அவர்கள் சொல்லளவில் ஸ்டாலின் பெயரால் உறுதிமொழி எடுத்துக்கொண்டாலும் செயலளவில் ட்ராட்ஸ்கிக்கே விசுவாசமாக உள்ளார்கள் என்பதை அல்பேனியத் தலைவர்களின் நிலைப்பாடு தெளிவாக வெளிப்படுத்துகிறது.

இரண்டாவது போக்கைப் பிரதிநிதித்துவம் செய்யும் பிறர், குறிப்பிட்ட திட்டவட்டமான நிலைமைகளின் கீழ் உருவாக்கப்படும் அய்க்கிய முன்னணிகளையும் சமரசங்களையும் பற்றிய கோட்பாடுகளை உருவாக்கி அவற்றை பொதுமைப் படுத்தி எல்லாச் சூழ்நிலைகளிலும் சமரசங்களையும் அய்க்கிய முன்னணிகளையும் உருவாக்கியே தீரவேண்டும் என்று வாதிடுகிறார்கள். இது வலதுசாரிப் பிறழ்வு. 'மூன்றுலகக் கோட்பாட்'டின் அடிப்படையாக அமைகிற இந்த உலகு தழுவிய 'அய்க்கிய முன்னணிவாதம்' இத்தகைய வலதுசாரிப் பிறழ்வின் பிரதிபலிப்பாகும். 'மூன்றுலகக் கோட்பாட்'டை நியாயப்படுத்த 'மக்கள் தினசரி' கட்டுரை (1941 இல் ஜெர்மனியின் பாசிச ஆக்கிரமிப்பை அடுத்து) பிரிட்டன், அமெரிக்கா, பிரான்ஸ் ஆகியவற்றுடன் சோவியத் யூனியன் ஒரு முன்னணியில் அய்க்கியமடைந்ததைச் சுட்டிக் காட்கிறது. 1935இலேயே பாசிசத்துக்கு எதிரான ஒரு பரந்த அய்க்கிய முன்னணியைக் கட்டுதல் என்ற கொள்கையை மூன்றாவது அகிலம் முன் வைத்தது. பொதுவாகச் சொன்னால் அது சரியான நடவடிக்கையாகும். ஆனால் அதே வேளையில், 1939 இல் சோவியத் யூனியனும் ஜெர்மனியும் ஒருவர் மற்றவர் நாட்டை ஆக்கிரமிப்பு செய்வதில்லை என்று செய்து கொண்ட ஒப்பந்தம் நடைமுறையில் அய்க்கிய முன்னணி கட்டுதல் என்ற பிரச்சனை நடைமுறைத் தந்திரம் சார்ந்த ஒன்றுதான் என்பதைக் காட்டுகிறது. குறிப்பாக, போர் நடந்த காலத்தில் அய்க்கிய முன்னணிகளின் தன்மை ஒவ்வொரு சூழ்நிலைமையின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நடைமுறைத் தந்திரத் தேவைகளுக்கு ஏற்றவாறு மாறிக் கொண்டே வந்தது. 1939 இல் சோவியத் யூனியன் ஜெர்மனி யுடன் ஒப்பந்தத்தை செய்து கொண்டது; 1941 இல் ஜெர்மனி சோவியத் யூனியனின் மீது போர் தொடுப்பதாக அறிவித்த தால், சோவியத் யூனியன் ஜெர்மானிய - எதிர்ப்பு முன்னணி யொன்றில் சேர வேண்டியிருந்தது. இந்த முன்னணியோ போரின் முடிவு வரையிலுமே நீடித்தது.

மூன்றாவது அகிலத்திலிருந்த பொதுவுடைமைக் கட்சிகள் பெரும்பாலானவற்றால் இந்த பாசிச-எதிர்ப்பு அய்க்கிய முன்னணி என்ற கருத்தாக்கமும்கூட முறையாகப் புரிந்து கொள்ளப்பட்டுச் சரியாக நடைமுறைப் படுத்தப்படவில்லை. இத்தகையதொரு நிலைமைக்கு மூன்றாவது அகிலமுமே ஓரளவு பொறுப்பாகும். இந்த பாசிச-எதிர்ப்பு அய்க்கிய முன்னணியில் சேர்ந்த பொதுவுடைமைக் கட்சிகள் எல்லாமே தத்தம் நாட்டு முதலாளிவர்க்கங்களின் வால்களைப் பிடித்துக்கொண்டு சென் றன. எனவே, அந்நாடுகளில் புரட்சிக்கான சாதகமான புற நிலைமைகள் விரைவில் தோன்றியபோது, அவற்றை அக்கட்சி களால் பயன்படுத்திக்கொள்ள முடியவில்லை; அவை ஏற்கனவே புரட்டல்வாதக் கட்சிகளாகச் சீரழிந்துவிட்டன. சீனப் பொது வுடைமைக் கட்சி, அல்பேனியத் தொழிலாளர்கட்சி ஆகிய இரண்டு கட்சிகள் மட்டுமே அய்க்கிய முன்னணி பற்றிய சரியான அணுகலை மேற்கொண்டு தத்தம் நாட்டுப் புரட்சிகளை வெற் றிக்கு இட்டுச் சென்றன. அய்க்கிய முன்னணி பற்றிய ஒருவரது அணுகல் எவ்வளவு முக்கியமானது என்பதையே இவையனைத் தும் எடுத்துக்காட்டுகின்றன.

இதேபோல, குறிப்பிட்ட திட்டவட்டமான சூழ்நிலைமை யில் உருவாக்கப்பட்ட ஒரு அய்க்கிய முன்னணியை, முற்றிலும் மாறுபட்டதொரு சூழ்நிலைமையிலும் கட்டவேண்டும் என்று கூறுவதும்கூட வலதுசாரிப் பிறழ்வாகும். எடுத்துக்காட்டாக, 1937-45 இல் சீனப் பொதுவுடைமைக் கட்சி, சியாங்கேஷேக் குடன் உருவாக்கிய அய்க்கிய முன்னணி, புதிய ஜனநாயகப் புரட்சிக் காலகட்டம் முழுவதிலும் அரைக்காலனி நாடுகள் பின்பற்ற வேண்டிய ஒரு முன்மாதிரியாகும் எனக் கூறுவது இத்தகையதொரு வலதுசாரிப் பிறழ்வாகும். சீனப்புரட்சிக் காலகட்டம் முழுவதையும் எடுத்துக்கொண்டால் (அதாவது 1927 முதல் 1949 வரை), எட்டாண்டுக்காலமே இந்த அய்க்கிய முன்னணி நீடித்தது என்பதை மறந்துவிடக்கூடாது. 1927-36

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



காலகட்டத்தில், உள்நாட்டுப்போர் சீனத்தில் நடந்துகொண்டிருந்தபோது, சியாங்கேஷேக்கால் பிரதிநிதித்துவம் செய்யப்பட்ட ஆளும் வர்க்கங்கள் முதன்மையான எதிரியாக இருந்தன. ஜப்பானிய ஏகாதிபத்தியத்தின் நேரடி ஆக்கிரமிப்பு என்ற சூழலில் உள்நாட்டுப்போர், தேசியப்போராக மாற்றமடைந்த போதுதான், சியாங்கேஷேக்குடன் அய்க்கிய முன்னணி என்பது சாத்தியமாயிற்று. மீண்டும், 1945-49 காலக்கட்டத்தில் அய்க்கிய முன்னணி என்பது நடைமுறைச் சாத்தியமற்றதாகியது. இக்காலகட்டத்தில் (1945-49), சியாங்கேஷேக்கை எதிர்த்துப் போராடுவதில் சீனப் பொதுவுடைமைக் கட்சி தனது விழிப்புணர்வைத் தளர்த்தியிருக்குமேயானால், சீனப்புரட்சி ஒரு பெரும் பின்னடைவை எதிர்கொண்டிருக்கும்.

சியாங்கேஷேக்குடன் உருவாக்கப்பட்ட அய்க்கிய முன்னணியை எடுத்துக்காட்டாக கூறி, அமெரிக்க - ஆதரவு ஆளும் வர்க்கங்களுடன் அய்க்கிய முன்னணியைக் கட்டுதல் என்ற கருத்துரையை இந்தியாவிலுள்ள சத்தியநாராயண் சிங் போன்ற சந்தர்ப்பவாதிகள் முன்வைத்தனர். சீனாவில் தேசியப்போர் கொந்தளித்துக் கொண்டிருந்த வேளையில் உருவாக்கப்பட்டது போன்றதொரு அய்க்கிய முன்னணியை இங்கு உள்நாட்டுப் போர்க் காலகட்டம் நிலவும் இப்போதும் கட்ட வேண்டும் என வாதிடுவது அப்பட்டமான வர்க்க ஒத்துழைப்புக் கொள்கையே தவிர வேறல்ல. ஆளும் வர்க்கங்களிலுள்ள அமெரிக்க-ஆதரவுப் பிரிவுடன் ஒத்துழைத்தல் என்ற பாதையில் ஏற்கனவே முன்னடி எடுத்துச் சென்றுவிட்ட இந்த சந்தர்ப்பவாதிகளுக்கு 'மூன்றுலகக் கோட்பாடு' ஒரு வரப்பிரசாதமாக உள்ளது. இந்திய ஆளும் வர்க்கங்களுடன் தாம் உருவாக்கிக் கொள்ளும் கூட்டணி, அமெரிக்க ஏகாதிபத்தியத்தையும் உள்ளடக்கிய பரந்த உலகளாவிய அய்க்கிய முன்னணியின் ஒரு பகுதியாகும் என வாதிடுவது இச்சந்தர்ப்பவாதிகளுக்கு இப்போது மிகவும் எளிதாகியுள்ளது. 'மூன்றுலகக் கோட்பாடு' சத்தியநாராயண் சிங் போன்ற ஓடுகாலிகளுக்கு எவ்வளவு நன்றாக உகந்ததாகிறது என்பது ஏற்கனவே வெளிப்படையாகிவிட்டது.

வினோத் மிஸ்ராவின் தலைமையிலுள்ள மற்றொரு டெங்-ஆதரவு அமைப்பும்கூட இதேபோன்றதொரு அய்க்கிய முன்னணியைக் கூட்டுவதன் மூலம் 'மூன்றுலகக் கோட்பாட்'டை நடைமுறைப்படுத்த முயற்சி செய்கிறது. எல்லாவற்றுக்கும் முதலில், அவர்கள் தற்போதைய இந்திய அரசாங்கத்தை ஒரு சோவியத் -ஆதரவு சுயேச்சதிகார அரசாங்கம் என்று மதிப்பீடு செய்து

www.tamilarangam.net



ஒரு தேசிய மாற்றுத்திட்டம் என்ற பெயரில் அரசாங்கத்துக்கு எதிரான எல்லாச் சக்திகளையும் உள்ளடக்கிய ஒரு அரசாங்க—எதிர்ப்பு அய்க்கிய முன்னணியொன்றைக் கட்டுதல் என்ற ஆலோசனையை முன்வைக்கிறார்கள். நடைமுறையில், இக் கொள்கையானது, முதன்மையாக, ஆளும் வர்க்கத்தின் அமெரிக்க ஆதரவுப்பிரிவு மற்றும் அதன் அரசியல் பிதிநிதிகள் ஆகியோரின் தலைமையின் கீழுள்ள சில அரசியல் அமைப்புகளை அங்கொன்றும் இங்கொன்றுமாக உருவாக்குதலுக்கே இட்டுச் சென்றுள்ளது. இவ்வாறு, இந்த வினோத் மிஸ்ரா குழுவினரைப் பொறுத்தவரை, அய்க்கிய முன்னணி எனக் கூறப்படும் இந்த முன்னணிதான், முந்திய வேலைத்திட்டத்தின்படி புதிய ஜனநாயகப் புரட்சியின் தேவைகளுக்கேற்ப உருவாக்கப்பட வேண்டிய அய்க்கிய முன்னணிக்குப் பதிலியாகிவிட்டது. இந்தியப் புரட்சியானது உள்நாட்டுப் போர்க்கட்டத்தில் சென்றுகொண்டிருக்கும் வேளையில், வர்க்கப்போராட்டத்தின் முனையை மழுங்கடிக்கும் திட்டவட்டமான நோக்கத்துடன் இந்த சந்தர்ப்பவாதிகள் ஒரு அப்பட்டமான வர்க்க ஒத்துழைப்பு அய்க்கிய முன்னணியொன்றைக் கட்டியெழுப்ப முயற்சி செய்கிறார்கள். 'மூன்றுலகக் கோட்பாடு' என்பது எவ்வாறு கடுமையாக நடத்தப்பட்ட, நடத்தப்படுகிற வர்க்கப் போராட்டத்தின் முனையை மழுங்கடிப்பதிலும் அதனை ஒரு வர்க்க ஒத்துழைப்பு அவியல் அமைப்பாக மாற்றுவதிலும் ஒரு எதிர்ப் புரட்சிப் பாத்திரத்தை வகிக்கிறது என்பதை இது எடுத்துக் காட்டுகிறது.

1981 துவக்கம் வரை வெளிப்படையான டெங்-ஆதரவு நிலையை மேற்கொண்டிருந்த 'மக்கள் யுத்தம்' பிரிவு என்ற மற்றொரு இ. பொ. க. (மா-லெ) அமைப்பானது, பின்னர் ஒரு மையவாத நிலைக்கு மாறிச்சென்றது. இப்போது அவர்கள், பண்பாட்டுப் புரட்சியையும் மாவோ உயர்த்துப்பிடித்த பல்வேறு கொள்கைகளையும் தற்போதைய சீ. பொ. க. தலைமை எதிர்ப்பதை பகிரங்கமாக விமர்சனம் செய்கிறார்கள்; சீ. பொ. கட்சி அதற்குள் இப்போது நடைபெற்றுவரும் இரண்டு மார்க்கப் போராட்டத்தின் மூலம் தனது தவறுகளைத் திருத்திக் கொள்ளும் என்ற பிரமைக்கு அவர்கள் இப்போதும் இடங் கொடுத்து அதைப் பரப்பிக்கொண்டு வருகிறார்கள். அதே வேளையில் அவர்கள் 'மூன்றுலகக் கோட்பாட்'டை உயர்த்துப் பிடிக்கிறார்கள்; மாவோதான் அதனை முதன்முதலாக உருவாக்கினார் என்றும் அது இப்போது டெங்கால் சிதைக்கப் படுகிறது என்றும் கூறுகிறார்கள். ஆனால் உண்மையில் அவர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கள் டெங்கால் முறைப்படுத்தப்பட்ட 'மூன்றுலகக் கோட்பாட்டை'யே உயர்த்துப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள்; இது முதன் முதலாக, 11 ஆவது பேரவைக்கான அறிக்கையில் ஹுவாவால் அறிவிக்கப்பட்டது; பின்னர் 'மக்கள் தினசரி' கட்டுரையில் விளக்கப்பட்டது. இதன் சாரம், நாம் ஏற்கனவே கூறியதுபோல், அரசு மட்டத்தில் அனைத்துலக சோவியத்-எதிர்ப்பு அய்க்கிய முன்னணியைக் கட்டுதலாகும். 'மக்கள் யுத்தம்' பிரிவு இப்போர்த்தந்திரத்தை உலகப் பாட்டாளி வர்க்கத்துக்கான சர்வதேசப் புரட்சிகர மார்க்கம் என்று ஏற்றுக் கொள்கிறது. இதற்கு அது கூறும் நியாயம் என்னவென்றால், 1970 களின் துவக்கத்திலிருந்து உலக நிலைமையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது என்பதும் அதற்குக் காரணம் சோவியத்யூனியன் மிக அபாயகரமான வல்லரசாக உருவாகியுள்ளதுதான் என்பதும் ஆகும். ஆனால், தேசிய அளவில்தாம், எஸ். என். எஸ்., வி. எம். ஆகியோரால் முன்வைக்கப்பட்டுள்ள போர்த்தந்திரத்தை எதிர்ப்பதாகக் கூறுகிறார்கள்; காரணம் அது வர்க்க ஒத்துழைப்புப் போர்த்தந்திரம் என்கிறார்கள். உண்மையில் 'மக்கள்யுத்தம்' பிரிவு தனக்குத்தானே முரண்படும் நிலைக்குச் சென்றுள்ளது. ஓர்புறம் அவர்கள், குறிப்பாக 'சோசலிச சீனா'வால் தலைமை தாங்கப்படும் அரசு-மட்ட அய்க்கிய முன்னணியைக் கட்டுதல் என்ற கொள்கையை உயர்த்துப் பிடிக்கிறார்கள். ஆனால் இப்போது அவர்கள் சீனத் தலைமை புரட்டல்வாதத் தலைமையாகிவிட்டது என்பதைப் புரிந்துகொண்டுள்ளதால், இத்தகையதொரு உலகளாவிய அய்க்கிய முன்னணிக்குத் தலைமை தாங்கப்போவது யார் என்ற கேள்விக்குப் பதில் இல்லாதவர்களாக உள்ளனர். மற்றோர் புறம், மூன்றுலகக் கோட்பாட்டால் விளக்கப்பட்டுள்ள உலகளாவிய போர்த்தந்திரத்துக்கு உகந்தவகையில் புரட்சியின் தேசியப் போர்த்தந்திரம் மாற்றியமைக்கப்பட்டாக வேண்டும் என்பதை அவர்கள் ஒத்துக்கொள்கின்ற போதிலும், இ. பொ. க. (மா. லெ) யின் 1970 ஆம் ஆண்டு வேலைத்திட்டத்தில் முன்வைக்கப்பட்ட புதிய ஜனநாயகப் புரட்சிக்கான அடிப்படை அய்க்கிய முன்னணிக் கொள்கையைப் பின்பற்றவும் விரும்புகிறார்கள். இந்த அடிப்படைக் கொள்கையிலிருந்து விலகிச் செல்வதாக எஸ். என். எஸ்., வி. எம். ஆகியோரை இவர்கள் விமர்சிக்கிறார்கள். அய்க்கிய முன்னணி பற்றிய இந்த இரண்டு மாறுபட்ட கருத்தாக்கங்களும் எவ்வாறு ஒன்றாக இணைந்து செல்லும்? 1970 ஆம் ஆண்டு வேலைத்திட்டமானது, நமது புரட்சியின் இன்றைய கட்டம் ஒரு உள்நாட்டுப் போரின் வழியே சென்றுகொண்டிருக்கிறது, இக்கட்டத்தில் எல்லா ஆளும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வர்க்கங்களுக்கும் எதிராக எல்லா புரட்சிகர வர்க்கங்களையும் அடுக்குகளையும் அய்க்கியப்படுத்த வேண்டும் என்ற கருத்தினை அடிப்படையாகக் கொண்டிருந்தது. ஆனால் 'மூன்றுலகக் கோட்பாடு' ஒரு வெளி எதிரிக்கு (அது சோவியத்யூனியன் என அடையாளங் காட்டப்படுகிறது) எதிராக, ஒரு தேசியப் போரை நடத்த ஆளும் வர்க்கங்களின் பல பிரிவுகளும் உள்ளடங்கிய ஒரு அய்க்கிய முன்னணி அமைக்கப்பட வேண்டிய வேறொரு நிலைமையைக் கருத்தில் கொள்கிறது. அய்க்கிய முன்னணி பற்றிய இந்த இரண்டு கருத்தாக்கங்களையும் இணைப்பதற்கு 'மக்கள்யுத்தம்' பிரிவு எடுத்துக்கொள்ளும் முயற்சி, தனக்குத்தானே முரண்படும் இத்தகையதொரு நிலையை மேற்கொள்ளும் கட்டாயத்துக்கு உள்ளாக்கியுள்ளது.

பகைவர்களுக்கிடையே முரண்பாடுகள் தோன்றுமானால் அவை புரட்சிகரச் சக்திகளின் நலன்களுக்குப் பயன்படுத்தப்பட வேண்டும். ஆயினும், அது சரியான முறையில் பயன்படுத்தவில்லையென்றால், புரட்சிகரச் சக்திகள் தம் முன் முயற்சியைப் பலசமயங்களில் இழந்துவிடும். பகைவர்களிடையே உள்ள முரண்பாடுகளைக் கூர்மைப்படுத்துதல் என்ற காரணங்காட்டி, எஸ். என். எஸ்ஸும் அவரது கூட்டாளிகளும் எதிரிகளின் ஒரு பிரிவுடன் ஏற்படுத்திய கூட்டின் விளைவு என்னவென்றால் அவர்களே அந்த எதிரிவர்க்கப் பிரிவின் வாலாக மாற்றப்பட்டுவிட்டனர் என்பதாகும். பகைவர்களுக்கிடையே உள்ள முரண்பாட்டைக் கூர்மைப்படுத்துதல் என்ற நோக்கத்தை நிறைவேற்ற எதிரிகளின் ஏதோவொரு குறிப்பிட்ட பிரிவுடன் கூட்டுச்சேர்வது என்பது எல்லாச் சமயங்களிலும் பயனுள்ளதாக இருக்காது. சில சமயங்களில் அது பயனுள்ளதாக அமையலாம். பல சமயங்களில், இரண்டு பிரிவுகளில் எதனோடும் சேராமல் இரண்டுக்கும் எதிரான போராட்டத்தை வலுப்படுத்துவது எதிரிகளுக்கிடையிலுள்ள முரண்பாடுகளைக் கூர்மைப்படுத்துவதில் உதவிகரமானதாக இருக்கும். இந்தியாவில் எதிரி வர்க்கங்களுக்கு எதிராகப் புரட்சிகரச் சக்திகளின் தாக்குதலின் வலிமை 1967 இலிருந்து வளர்ச்சி பெற்றதால் தான் அவ்வர்க்கங்களுக்கிடையே புலப்படாது இருந்து வந்த முரண்பாடு மேலே வந்து கூர்மையடைந்தது.

'மூன்றுலகக் கோட்பாடு' அரசுகளுக்கிடையிலான அய்க்கிய முன்னணி பற்றிப் பேசுகிறதேயின்றி ஓர் உலக அளவில் புரட்சிகரச் சக்திகளுக்கிடையிலான அய்க்கிய முன்னணியைப் பற்றியல்ல என்பதை நாம் பார்த்தோம். உலகிலுள்ள பெரும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பாலான நாடுகளைத் தழுவுகிற ஒரு அய்க்கிய முன்னணியின் அடிப்படை வேலைப்பாங்கு அரசுகளுக்கிடையே உள்ள உறவு களின் கீழ் செயல்பட்டு வருகிற நெறிகளுக்குப் பொருந்திய வகையிலேயே அமையும். வெவ்வேறு சமூக அமைப்புகளைக் கொண்ட அரசுகள் இந்த அய்க்கிய முன்னணிக்குள் வரும். எனவே, வெவ்வேறு சமூக அமைப்புகளைக் கொண்ட அரசு களுக்கிடையிலான உறவுகளுக்கு வழிகாட்டும் ஐந்து சமாதான சகவாழ்வு நெறிகள்தாம் இந்த அய்க்கிய முன்னணிக்குள் அவற்றுக்கிடையே உள்ள உறவுகளையும் தீர்மானிக்கும். எனவே இயல்பாகவே சமாதான சகவாழ்வுதான் இந்த அய்க்கிய முன்னணியின் சுழல் மையமாக அமையும். இதிலிருந்து தெளிவாவது என்னவெனில், மூன்றுலகக் கோட் பாட்டாளர்களின் அய்க்கிய முன்னணியானது, சமாதான சகவாழ்வுக் கொள்கையை பாட்டாளி வர்க்கத்தின் உலகப் புரட்சிகர மார்க்கமாக மாற்றுவதன் மூலம் குருச்சேவ் உரு வாக்கிய அதே விளைவைத்தான் உருவாக்குகிறது. உலகப் புரட்சியில், சமாதான சகவாழ்வுக் கொள்கையின் அடிப் படையில் அமைந்த ஒரு அய்க்கிய முன்னணியால் சாதிக்கக் கூடியதெல்லாம், மக்களின் புரட்சிகரப் போராட்டங்களை ஒடுக்குவதற்குக் கூட்டுச்சேருவது தான். இதற்கு எடுத்துக் காட்டாக இருப்பது 'ஆசியான்' என்ற தென்கிழக்கு ஆகிய நாடுகளின் அமைப்பாகும். சோவியத் சமூக ஏகாதிபத்தியத் துக்கு எதிரான ஒரு அய்க்கிய முன்னணியே இந்த அமைப்பு என்றும் மூன்றாம் உலக நாடுகளின் பரந்த முன்னணியைக் கட்டியெழுப்புவதற்குச் சாதகமான காரணிகளில் இதுவும் ஒன்று என்றும் அதை உயர்த்துப் பிடிப்பதில் மூன்றுலகக் கோட்பாளர்கள் பெரும் உற்சாகம் காட்டுகின்றனர். உண்மை யில், இந்த அமைப்பானது, அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் முழு ஆதரவுடனும் ஆசிர்வாதத்துடனும், ஏகாதிபத்தியக் கைக்கூலிகளால், பிலிப்பைனஸ், இநதோனீஷியா, தாய்லாந்து, மலேசியா, சிங்கப்பூர் ஆகியவற்றின் தரகு முதலாளிய அரசு களால் இந்த நாடுகளில் தடுத்து நிறுத்தப்படமுடியாத வகையில் வளர்ந்து வரும் மக்களின் புரட்சிகரப் போராட்டங் களை நசுக்குவதறகுத் திட்டங்களை வகுக்கும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டதாகும். உலகின் பல்வேறு பகுதிகளில் தோன்றியுள்ள இத்தகைய அமைப்புகள், முன்னணிகளின் உண்மை நோக்கமும் இதற்கு மாறுபட்டதல்ல.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## 7. இரண்டு வல்லரசுகள் என்ற பிரச்சனை

'மூன்றுலகக் கோட்'டின் மிக முக்கியமான கூறு, இரண்டு வல்லரசுகளுக்கு எதிரான இந்த உலகாளவிய அய்க்கிய முன்னணியைக் கட்டும் அதன் முயற்சியும் இறுதியில் சோவியத் யூனியன்தான் இந்த அய்க்கிய முன்னணியின் குறியிலக்கு என அடையாளங்காட்டுவதும் தான். இத்தகைய நிலைபாட்டுக்கு ஆதரவாக எழுப்பப்படும் முக்கியமான வாதம் என்ன வென்றால், சோவியத் யூனியன் தான் எழுச்சி பெற்றும்வரும் வல்லரசு, எனவே அதுதான் மிகவும் ஆக்கிரமிப்புத்தன்மை கொண்டதாக உள்ளது என்பதாகும். இந்த ஆய்வு அனைத்தும், முதன்மை எதிரியை இனங்கண்டு தனிமைப்படுத்திக் காட்ட இயங்கியலைப் பயன்படுத்துதல் என்ற பெயரால் செய்யப்படுகிறது.

உண்மையில், இயங்கியலைப் பயன்படுத்துதல் என்ற பெயரால், மூன்றுலகக் கோட்பாட்டை உருவாக்கியவர்கள், ஒரு யாந்திரிகமான அணுகலையே பயன்படுத்துகிறார்கள். எல்லாவற்றுக்கும் முதலில், அவர்கள் உலகளாவிய ஏகாதிபத்திய அமைப்பிலிருந்து இருவல்லரசுகளையும் தனியாகப் பிரித்தெடுக்கிறார்கள். பிறகு அவை மட்டுமே ஒரே எதிரிகள் என்று கருதுகிறார்கள். இதன்விளைவாக, ஏகாதிபத்திய அமைப்பு முழுவதையும் தகர்ப்பதற்கான போராட்டத்தின் முனை மழுங்கடிக்கப்படுகிறது. ஏகாதிபத்திய அமைப்பைக் கட்டிக் காப்பதில் இரு வல்லரசுகளும் தலைமைப் பங்கை வகிக்கின்றன என்பது உண்மைதான்: எனவே எல்லா ஏகாதிபத்திய-எதிர்ப்புப் போராட்டங்களிலும் அவை முதன்மைக் குறியிலக்காக இருந்தாக வேண்டும். ஆனால் உலக முழுவதுமுள்ள போராடும் மக்கள் அனைவரும் அவற்றை எவ்வகையில் தாக்க முடியும்? ஆதிக்கம் செலுத்தப்படும் நாடுகள் அனைத்திலுமுள்ள தமது கூட்டாளிகள், வேட்டை நாய்கள் ஆகியவற்றின் மூலமே வல்லரசுகள் தமது அமைப்பைக் கட்டிக் காத்துக் கொண்டிருக்கின்றன: அதனால்தான் மார்க்சிய-லெனினியர்கள் கீழ்க்காணும் சர்வதேசப் போர்த்தந்திரத்தை முன்வைக்கிறார்கள்: உலக முழுவதிலுமுள்ள ஏகாதிபத்திய-எதிர்ப்புச் சக்திகள் அனைத்தும் ஒன்றுபட்டு எல்லா நாடுகளிலுமுள்ள ஏகாதிபத்தியவாதிகளின் வேட்டைநாய்களுக்கும் கூட்டாளிகளுக்கும் எதிரான ஒரு நீடித்த விட்டுக்கொடுக்காத போராட்டத்தை நடத்தி, உலக ஏகாதிபத்திய அமைப்பு முழுவதையும் துடைத்தெறிய வேண்டும். எனவே, இப்பார்வையின் படி, வல்லரசுகளுக்கு எதிரான போராட்டம் என்பது, ஒவ்வொரு நாட்டிலுமுள்ள பிற்போக்கு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆளும் வர்க்கத்துக்கு எதிரான போராட்டத்திலிருந்தும் ஏகாதிபத்திய அமைப்பு முழுவதற்கும் எதிரான போராட்டத்திலிருந்தும் பிரிக்கப்பட்டது அல்ல. ஆனால் மூன்றுலாகக் கோட்பாட்டாளர்கள் இத்தகையதொரு சர்வதேசப் புரட்சிகரப் போர்த்தந்திரத்துக்கு உணர்வு பூர்வமாகக் குழிபறிக்கிறார்கள். தமது வர்க்க எதிரிகளுக்கு எதிரான உடனடியான போராட்டத்திலிருந்து புரட்சிகரச் சக்திகளின் கவனத்தைத் திசை திருப்புவதன் மூலமும், அதே வல்லரசுகளின் கூட்டாளிகள் வேட்டை நாய்கள் அனைத்துடனும் ஒரு அய்க்கிய முன்னணியைக் கட்டுதல் என்ற வர்க்க ஒத்துழைப்புக் கொள்கையை முன் வைப்பதன் மூலமும் இக்குழிபறிப்பு வேலையைச் செய்கிறார்கள். இவ்வாறு, மூன்றுலகக் கோட்பாட்டாளர்கள், வல்லரசுகளின் கூட்டாளிகளையும், அவர்களது வேட்டை நாய்கள் அனைத்தையும் பாதுகாத்து இறுதியில் ஏகாதிபத்தியங்களின் நலன்களையே பாதுகாக்கிறார்கள்.

இதோடு திருப்தியடையாமல், சோவியத் யூனியனுக்கு எதிரான உலகளாவிய அய்க்கிய முன்னணியைக் கட்டும் அடுத்த நடவடிக்கையையும் மூன்றுலகக் கோட்பாட்டாளர்கள் மேற்கொள்கிறார்கள். இவ்வாறு இந்த முன்னணிக்குள் வல்லரசு ஒன்றையும் சேர்த்துக்கொள்கிறார்கள். இவ்வாறு இருவல்லரசுகளின் தலைமையிலுள்ள இரு ஏகாதிபத்திய முகாம்களுக்கு எதிரான போராட்டத்தில் ஒரு வல்லரசுடன் சேருமாறு அனைத்துலக மக்களும்அனைத்துபுரட்சிகரச் சக்திகளும் கேட்கப்படுகின்றனர்! ஒவ்வொருவல்லரசிடமும் இருக்கிற ஏவுகணைகளின் எண்ணிக்கையையும் ஒவ்வொரு வல்லரசின் ஆதிக்கத்தின் கீழுள்ள நாடுகளின் எண்ணிக்கையையும் கணக்கிட்டு அதன் அடிப்படையில் எந்த வல்லரசு மேலும் ஆக்கிரமிப்புத் தன்மை வாய்ந்தது அல்லது வலுவானது என்பதைத் தீர்மானிக்கும் அர்த்த மற்ற விவாதத்தின் மீது மக்களின் கவனத்தைத் திசைதிருப்ப முயல்கிறார்கள். புள்ளி விவரங்களிலுள்ள இத்தகைய வேறுபாடுகள் இரண்டு வல்லரசுகளின் தன்மையிலோ அல்லது ஏகாதிபத்திய அமைப்பு முழுவதின் தன்மையிலோ எத்தகைய அடிப்படை மாற்றத்தையும் ஏற்படுத்தப் போவதில்லை. சிலசமயங்களில் ஒரு வல்லரசும், வேறு சமயங்களில் மற்றொரு வல்லரசும் ஒன்று மற்றதைக் காட்டிலும் ஆக்கிரமிப்புத்தன்மை கொண்டதாகவும் வலிமை கூடியதாகவும் தோன்றும். பல்வேறு ஏகாதிப்த்திய முகாம்களிடையே உள்ள சக்திகளின் பலாபத்தில் ஏற்படும் இத்தகைய நடைமுறைத்தந்திர வேறுபாடுகளை அடிப்படையாகக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கொண்டு புரட்சிகரச் சக்திகள் தமது சர்வதேசப் போர்த்தந்தி ரத்தை தீர்மானிக்கக் கூடாது.

மேலும், சோவியத் சமூக ஏகாதிபத்தியம் அமெரிக்க ஏகாதிபத்தியத்தைக் காட்டிலும் கூடுதலான ஆக்கிரமிப்புத் தன்மை வாய்ந்தது என்பதற்கும் அமெரிக்க ஏகாதிபத்தியம் தற்காப்பு நிலையிலுள்ளது என்பதற்கும் மூன்றுலகக் கோட் பாட்டாளர்கள் முன்வைக்கும் வாதங்கள் ஆதாரமற்றவை யும் விஞ்ஞான ரீதியற்றவையுமாகும். சோவியத் சமூக ஏகாதி பத்தியம் எழுச்சிபெற்று வரும் சக்தி, எனவே அது ஆக்கிரமிப்பு நிலைபாட்டை மேற்கொள்ளுகிறது என்பதும்; அமெரிக்க ஏகாதிபத்தியம் வீழ்ச்சி பெற்று வருகிறது, எனவே அது ஒரு தற்காப்பு நிலைபாட்டை மேற்கொள்ளுமாறு நிர்ப்பந்திக்கப் படுகிறது என்பதும் ஒரு வாதம். இத்தகைய பொதுமைப் படுத்தல்கள் வல்லரசுகளின் தன்மையைக் கண்டறிய நமக்கு உதவா. தேவைப்படுவது என்னவெனில், ஒவ்வொரு வல்லரசின் வலிமை, வலுக்குறைவு பற்றிய திட்டவட்டமான ஆய்வுதான். 70 களின் துவக்கத்தில், சோவியத் சமூக ஏகாதிபத்தியம் முன்னிலைக்கு வந்து அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்குத் தான் ஒரு சக்தி வாய்ந்த போட்டியாளன் என்பதை வலியுறுத்திக் கொண்டிருந்தபோது, அது அமெரிக்க ஏகாதிபத்தியத்தைக் காட்டிலும் ஆக்கிரமிப்புத்தன்மை வாய்ந்ததாகவும் மேன் மேலும் அதிகமான பிரதேசங்களைத் தன் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரும் பேராசைமிக்கதாகவும் தோன்றிற்று என்பது உண்மை. அதே வேளையில், இந்தோசீனாவின் தேசிய விடுதலைச் சக்திகளிடமிருந்து வலுமிக்க அடிகளை வாங்கிக்கொண்டிருந்த அமெரிக்க ஏகாதிபத்தி யமோ பலகீனப்பட்டு தற்காப்பு நிலைக்குத் தள்ளப்பட்டு வருவதாகவும் இருந்தது. ஆனால் இந்த நிலைமை நெடு நாள் நீடிக்கவில்லை. ஒட்டுமொத்தமான ஏகாதிபத்திய அமைப் பின் உள்ளார்ந்த நெருக்கடியானது மேன்மேலும் கூர்மை யடைந்துகொண்டே வந்தபோதிலும், அமெரிக்க ஏகாதிபத்திய மானது பொருளாதார, அரசியல் மட்டங்கள் இரண்டிலும் தான் அடைந்த தற்காலிகப் பின்னடைவுகளிலிருந்து மீள்வதைச் சாதித்துள்ளது.

மற்றோர்புறம், ஆப்கானிஸ்தான் மீதான ஆக்கிரமிப்பில் உச்சநிலையை அடைந்த தனது தாக்குதலை சோவியத்யூனியன் தொடர்ந்து நடத்திக்கொண்டு வந்தபோதிலும், சோவியத் யூனியனின் அடிப்படைப் பலகீனம் தன்னைத்தானே வெளிப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



படுத்திக்கொண்டு வந்துள்ளது. ஆப்கானிஸ்தானில் சிக்குண்டு, மக்களின் எதிர்ப்புப் போராட்டக் களத்திலிருந்து வெளியே வரமுடியாத அவர்களால் போலந்து நாட்டுத் தொழிலாளர்கள் சோவியத் எஜமானர்களுக்கும் அவர்களது கைக்கூலிகளுக்கும் எதிராகக் கிளர்ந்தெழுந்தபோது தமது தாக்குதலைத் தொடர்ந்து நடத்த முடியவில்லை. இன்றைய போலந்து நாளைய சோவியத் யூனியனாகும். போலந்து, சோவியத்முகாம் நாடுகளின் உள்ளார்ந்த பலவீனத்துக்கான குறியீடாக மாறியுள்ளது. அது அடிப்படையில்; மத்தியப்படுத்தப்பட்ட அதிகாரவர்க்க ஆட்சியின் மிகைப்பளுவைத் தாங்கிக் கொண்டிருக்கும் முதலாளிய அமைப்புதான். சோவியத் முகாமின் பொருளாதாரங்களுக்கு, சாதாரணமான முதலாளிய நாடுகளுக்குள்ள வீரியமும் வளைந்துகொடுக்கும் தன்மையையும்கூட இல்லை. இதன் காரணமாக, சோவியத் யூனியன் உட்பட சோவியத் முகாம் நாடுகள் அனைத்தும் மேற்கு ஏகாதிபத்திய முகாமுக்கு மேன்மேலும் கடன்படுகின்றன. அமெரிக்க முகாம் ஏகாதிபத்திய நாடுகள் எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடிகள் யாவும் சோவியத் முகாம் நாடுகளிலும் பிரதிபலிக்கின்றன. தமது பொருளாதார அமைப்பின் இந்த அடிப்படைப் பலகீனத்தை மூடிமறைக்க சோவியத் யூனியனானது மூலதனத்தை ஏற்றுமதி செய்வதைக் காட்டிலும் மேன்மேலும் அதிகமாக ஆயுதங்களை ஏற்றுமதி செய்துவருகிறது. விஷயத்தின் சாரமே இதுதான்; இது சோவியத் சமூக ஏகாதிபத்தியத்தின் அடிப்படை வரையறைகளைச் சுட்டிக் காட்டுகிறது.

அண்மைக்கால வரலாறு, குறிப்பாக மத்தியக் கிழக்கு நாடுகளில் ஏற்பட்டுள்ள வளர்ச்சிகள், அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்புத் தன்மையைத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. அது, சோவியத் சமூக ஏகாதிபத்தியத்தின் உள்ளார்ந்த பலகீனத்தையும்கூட வெளிப்படுத்தியது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் வெளிப்படையான ஆதரவுடன் இஸ்ரேல் நடத்திய அப்பட்டமான ஆக்கிரமிப்புக்கு எதிராக சோவியத் யூனியனால் ஏதும் செய்ய முடியவில்லை. வல்லரசுகளால், ஆக்கிரமிப்பு நிலையானது தற்காப்பு நிலையாகவும், தற்காப்பு நிலையானது ஆக்கிரமிப்பு நிலையாகவும் மாற்றப்படுகிறது என்பதை இது காட்டுகிறது.

மூன்றுலகக் கோட்பாட்டாளர்களைப் பொறுத்தவரை உலக மக்களின் முதன்மை எதிரி சோவியத் சமூக ஏகாதிபத்

மா—4

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தியமே என்ற அவர்களது மதிப்பீட்டின் அடிப்படையில், எல்லா நாடுகளிலுமுள்ள புரட்சிகரச்சக்திகள், அமெரிக்க ஆதரவு ஆளும் வர்க்கங்கள் உள்ளிட்ட சோவியத்-எதிர்ப்பு அய்க்கிய முன்னணிகளைக் கட்டவேண்டும். ஒவ்வொரு நாட்டிலும் உள்ள நிலைமைக்குப் பொருந்திய வகையில் ஏதேனும் ஒரு வல்லரசே அந்தநாட்டின் முதன்மை எதிரியாக மாறுவது சாத்தியமானது. ஆனால் இத்தகையதொரு நிலைமையில், அந்த நாட்டின் புரட்சிகரச்சக்திகள் மற்றொரு வல்லரசுடன் ஒரு அய்க்கிய முன்னணியில் பங்கேற்கவேண்டும் என்று வாதிடுவது அர்த்தமற்றது. பெரும்பான்மையான ஆசிய நாடுகளில் இன்று அமெரிக்க ஏகாதிபத்தியம்தான் ஆதிக்கம் செலுத்துகிறது. ஆனால் இந்த நாடுகளிலுள்ள புரட்சிகரச்சக்திகள் சோவியத் சமூக ஏகாதிபத்தியத்துடன் அய்க்கியப்பட வேண்டும் என்றுகூறுவது தற்கொலைப் பாதையை முன்வைப்பதாகும். சோவியத சமூக ஏகாதிபத்தியம் ஆதிக்கச் சக்தியாக உள்ள நாடுகளில் அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் சமரசம் கொள்ளுமாறு வழக்காடுவதும் இதேபோல துரோகத்தனமானதாகும். லத்தீன் அமெரிக்காவிலுள்ள பெரும்பான்மையான நாடுகளில் முக்கிய ஆபத்தாக இருப்பது அமெரிக்க ஏகாதிபத்தியமாகும். ஆப்பிரிக்காவிலுள்ள நிலைமை கூட பெரிதும் மாறுபட்டதல்ல. இந்த ஒட்டுமொத்தமான சூழ்நிலைமையில், இந்த நாடுகளிலுள்ள புரட்சிகரச் சக்திகள் எல்லாம் முதன்மையான எதிரி என்று தாம் கூறுகிற சோவியத் யூனியனுக்கு எதிராகப் போராடுவதற்கு அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் கூட்டுச் சேரவேண்டும் என்று மூன்றுலகக் கோட்பாட்டாளர்கள் கூறுவது, முன்னேறிச் சென்று கொண்டிருக்கிற ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்துக்குக் குழிபறிக்கும் நோக்க முடையதாகும். ஆயினும், இரண்டு ஏகாதிபத்தியங்களுக்கு எதிராகவும் அவற்றுடன் இணைந்துள்ள இதர ஏகாதிபத்தியச் சக்திகளுக்கும் ஏகாதிபத்தியத்தின் கையாட்களான உள்நாட்டுப் பிற்போக்குச் சக்திகளுக்கும் எதிராகவும் சமரசமற்ற போராட்டத்தை நடத்துவதன் மூலமாக மட்டுமே உலகப் புரட்சிகரச் சக்திகள் முன்னேறிச் செல்ல முடியும்.

## 8. புரட்சியும் போரும்

அச்சுறுத்திக் கொண்டிருக்கிற உலகப் போர் அபாயத்தைச் சந்திப்பதற்கான சக்திவாய்ந்த நடவடிக்கையாக, வல்லரசுகளுக்கு எதிரான இந்த உலக முன்னணியை மூன்றுலகக் கோட்பாட்டாளர்கள் கோருகின்றனர். இந்த உலகப் போரைச் சுட்டிக்காட்டுவதன் மூலமாக, அவர்கள் உண்மையில் உள்நாட்டு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வர்க்கப் போராட்டத்தைக் கைவிட்டு, மூன்றாம், இரண்டாம் உலக நாடுகளின் அரசுகளுக்கிடையே ஓர் அய்க்கிய முன்னணியைக் கட்டுவதற்கு வழக்காடுகிறார்கள். இரண்டாம் உலகப் போர் முடிவடைந்த தருணத்திலிருந்தே உலகப் புரட்சிக்கு எதிரில் மூன்றாம் உலகப் போர் அச்சுறுத்தல் தொடங்கிற்று.

இரண்டாம் உலகப்போர் முடிவடைந்த உடனேயே மாசேதுங் 1946 இல் கூறியதாவது:

''அமெரிக்க மக்களும், அமெரிக்க ஆக்கிரமிப்பால் அச்சுறுத்தப்படுகிற எல்லா நாடுகளின் மக்களும் அய்க்கியப்பட்டு அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள், இந்த நாடுகளிலுள்ள அவர்களது வேட்டை நாய்கள் ஆகியோரின் தாக்குதலுக்கு எதிராகப் போராட வேண்டும் என்று நான் கருதுகிறேன். இப்போராட்டத்தில் பெறும் வெற்றியின் மூலமாக மட்டுமே ஒரு மூன்றாம் உலகப்போர் தவிர்க்கப்பட முடியும்; இல்லாவிடில் அதைத் தவிர்க்க முடியாது''.

(மாசேதுங், தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்புகள், பாகம் 4, பக்கம் 100)

உலகப் போரைத் தவிர்க்க, ஆக்கிரமிப்பு அச்சுறுத்தலை எதிர்நோக்கும் நாடுகளிடையே ஓர் அய்க்கியத்தைக் கட்டுமாறு மாசேதுங் கோரவில்லை; மாறாக எல்லா நாடுகளிலுமுள்ள மக்கள் அய்க்கியப்பட்டு அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கும் இந்நாடுகளில் உள்ள பிற்போக்குச் சக்திக்கும் எதிராகப் போராடுமாறு அறைகூவி அழைத்தார். உலகப்போர் அச்சுறுத்தலைச் சந்திக்க மாசேதுங் ஒரு வர்க்க அடிப்படை கொண்ட அய்க்கிய முன்னணியை முன்வைத்தார். இது மூன்றுலகக் கோட்பாட்டாளர்களின் அய்க்கிய முன்னணியிலிருந்து அடிப்படையிலேயே வேறுபட்டது.

இன்றைய உலக நிலைமையானது, இரண்டாம் உலகப் போருக்குப் பிந்திய துவக்ககால கட்டம் தொட்டு மாறியுள்ளது என்பது உண்மை. உலகப் போருக்குப்பிறகு, ஏகாதிபத்தியச் சக்திகள் ஏகாதிபத்தியச் சுரண்டல், கொள்ளை ஆகியவற்றின் புதிய வடிவம் ஒன்றை நிறுவியுள்ளன. அதுதான் புதுக்காலனிய முறை. இப்புதிய முறையின் மூலம் எல்லா ஏகாதிபத்திய நாடுகளும் பொருளாதாரரீதியில் ஆதிக்கம் செலுத்தப்படும் நாடுகள் எதுவொன்றிலும் ஊடுருவவும் கொள்ளையடிக்கவும் முடியும். எனவே இங்கு ஆதிக்கத்துக்கான போராட்டம் மாறு

meerasiva@...net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பட்ட வடிவம் ஒன்றை எடுத்தது. உலகின் பிரதேசங்களை மறு பங்கீடு செய்துகொள்வது என்ற பழைய முறை இப்போது ஏகாதிபத்தியச் சக்திகளின் உடனடியான அக்கறையாக இருக்க வில்லை. எனவே இருபது அல்லது முப்பது ஆண்டுகளாக, பொருளாதார, அரசியல் மட்டங்கள் இரண்டிலும் உலகம் முழுவதிலும் ஸ்திரத்தன்மையையும் வளர்ச்சியையும் அவற்றால் கட்டிக்காக்க முடிந்தது என்ற தோற்றத்தைத் தரமுடிந்தது. ஆனால் முதலாளிய அமைப்பின் உள்ளார்ந்த பலகீனத்தை, இத்தகைய நடவடிக்கைகளால் மூடிமறைக்க முடியவில்லை. ஏகாதிபத்திய அமைப்பால் எதிர்கொள்ளப்படும் பொருளாதார நெருக்கடிகள், அறுபதுகளின் இறுதியில் ஆரம்பமாயின; அவற்றுக்குத் தீர்வுகாண எடுத்துக்கொள்ளப்பட்ட முயற்சிகளை மீறியும், மேன்மேலும் கடுமையானவையாக மாறிவருகின்றன. இந்த நெருக்கடி அரசியல் மட்டத்திலும்கூடப் பிரதிபலித்து, நாடுகளுக்கும் முகாம்களுக்கும் இடையில் கடுமையான மோதல்களுக்கு வழிவகுத்து, வட்டாரப் போர்களையும் பதட்ட நிலைகளையும் தோற்றுவித்து வருகிறது. 1970 களில் அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு எதிரான சக்திவாய்ந்த போட்டியாளனாக சோவியத் சமூக ஏகாதிபத்தியம் எழுச்சி பெற்றது இந்த மோதல்களின் தன்மையையும் பரிமாணத்தையும் அடிப்படையில் மாற்றியது. இந்த இரண்டு வல்லரசுகளின் தலைமையின் கீழ் உலகம் இரண்டு முகாம்களாகப் பிரிக்கப்பட்டது. உலகில் மேலாதிக்கம் பெறுவதற்காக இந்த இரண்டு வல்லரசுகளிடையே நடக்கும் போட்டி புதிய பரிமாணங்களைப் பெற்று வருகின்றது. ஆதிக்கத்திலுள்ள நாடுகளின் மீது ஏகாதிபத்தியச் சக்திகள் நேரடியான இராணுவ ஆக்கிரமிப்புகளைச் செய்தல் என்பது பொதுவான நடைமுறையாக இல்லை; அது விதிவிலக்கான சில நிலைமைகளில் மட்டுமே மேற்கொள்ளப்படுகிறது. ஆயினும் வல்லரசுகளுக்கிடையிலான போட்டி உலக அளவில் வேறொரு தளத்தில் கூர்மையடைந்துகொண்டே வருகிறது. இன்றைய அணு ஆயுதப்போர்க் காலகட்டத்தில், முழு உலகின் மீதும் ஒரு வல்லரசின் ஆதிக்கம் நிலைநாட்டப்பெறல் என்பது முதன்மையாக, அந்த வல்லரசின் கட்டுப்பாட்டுக்குள்ளேயோ அல்லது ஆதிக்கத்திலேயோ உள்ள பிரதேசங்களின் பரப்பால் தீர்மானிக்கப்படுவதில்லை; மாறாக, ஒரு உலக அளவில் ஒட்டு மொத்தமான அணு ஆயுதத்தாக்குதலுக்கான ஆற்றலே தீர்மானிக்கக்கூடியதாக இருக்கிறது. எனவே இந்த இரண்டு ஏகாதிபத்திய முகாம்களுக்கிடையே உள்ள போட்டியானது, முதன்மையாக, அணு ஆயுதத்தாக்குதல் ஆற்றலில் மேலாதிக்கம் பெறுவதில்தான் ஒருமுனைப்பட்டுள்ளது. ஏனெனில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உலக அளவில் அரசியல், பொருளாதார விஷயங்கள் இரண்டி லும் கட்டுப்பாடு செலுத்துவதில் ஒரு வல்லரசுக்குள்ள ஒட்டு மொத்தமான சக்தியை அணு ஆயுதத்தாக்குதல் ஆற்றலே தீர்மானிக்கிறது. அணு ஆயுத வலிமையில் சமநிலை என்ற பிரச்சனையில் இரு முகாம்களுக்குமிடையே நடந்து வரும் இன்றைய மூர்க்கத்தனமான போட்டியானது, ஏகாதிபத்தியச் சக்திகளிடையே நிலவும் போட்டியின் அடிப்படைப் பண்பின் புலப்பாடுதான். இது, நிச்சயமாக ஒரு மூன்றாம் உலகப் போருக்கான (இது கட்டாயம் அணு ஆயுதப் போர்தான்) சாத்தியப்பாட்டை அதிகரித்துள்ளது. ஒரு உலகப் போருக் கான இத்தகையதொரு சாத்தியப்பாடு நிலவுகையில், சர்வ தேச மட்டத்தில் புரட்சிகரச் சக்திகளின் போர்த் தந்திரம் என்பது ஒவ்வொரு நாட்டிலும் வர்க்கப் போராட்டத்தையும் புரட்சிகரப் போராட்டத்தையும் தீவிரப்படுத்தி, ஏகாதி பத்தியச் சக்திகள் தமது சொந்த இருப்புக்காகப் போராடு மாறு அவற்றை நிர்ப்பந்திப்பதுதான். இத்தகைய போராட் டங்களைத் தீவிரப்படுத்துவதன் மூலமே புரட்சிகரச் சக்திகள் நிகழும் சாத்தியப்பாடுடைய உலகப்போரைத் தவிர்க்கும் நம்பிக்கை பெறலாம்.

மூன்றுலகக் கோட்பாளர்களின் போதனையின்படி, இந்தச் சகாப்தத்தில் பாட்டாளிவர்க்கம் மற்றும் இதர புரட்சிகரச் சக்திகளின் கடமை, வல்லரசுகளின் ஆக்கிரமிப்புக்கு எதிராகத் தாய்நாட்டின் 'பாதுகாப்பையும் இறைமையையும் பாதுகாக்க முயற்சி செய்யும் பிற்போக்கு அரசுகளுக்கு ஆதரவு தருவது தான். மூன்றாம் உலகப்போர் அச்சுறுத்தல் என்ற பிரச் சனையை எழுப்பிய குருச்சேவ் மற்றும் அவனது கூட்டாளி களின் வஞ்சகத்தனமான கொள்கையின் சாரமும் கூட இது வேதான். ஆனால் குருச்சேவும் அவனது கூட்டாளிகளும் முன் வைத்த வேலைத்திட்டம் புதியதொன்றல்ல. இது உலகப் போருக்கு முன்பு குருச்சேவின் உண்மையான ஆசிரியர்களான காட்ஸ்கியும் அவரது ஆதரவாளர்களும் முன்வைத்த வேலைத் திட்டத்தின் புதுப்பிக்கப்பட்ட பதிப்புதான். குருச்சேவின் வர்க்கத் துரோகத்துக்குப் பதில் சொல்லும் வகையில் 'மக்கள் தினசரி'யும் 'செங்கொடி'யும் ''போர், அமைதி என்ற பிரச் சனையில் இரு மாறுபட்ட மார்க்கங்கள்'' என்ற ஆவணத்தை. 1963 நவம்பர் 17 இல் கூட்டாக எழுதின. அந்த ஆவணம் கூறுவதாவது:-

''முதல் உலகப் போர் மூளுகையில், பழைய புரட்டல் வாதிகள் வேகமாகத் தமது சமாதான

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முகமூடிகளைக் களைந்தெறிந்துவிட்டு, தத்தம் நாட்டு ஏகாதிபத்திய அரசாங்கங்களுடன் சேர்ந்து கொண்டு உலகை பறுபங்கீடு செய்வதற்கான ஏகாதிபத்தியப் போரை ஆதரித்து பாராளுமன்றத்தில் இராணுவச் செலவுக்கான மதிப்பீட்டுக்கு ஆதரவாக வாக்களித்து, 'தாய்நாட்டைக் காத்தல்' என்ற போலி முழக்கங்களின் கீழ் போரில் குதித்து, இதரநாடுகளிலுள்ள தம் வர்க்க சகோதரர்களைப் படுகொலை செய்யத் சொந்த நாட்டுப் பாட்டாளி வர்க்கத்தைத் தூண்டி விட்டனர்''. (பக்கம் 33)

மூன்றுலகக் கோட்பாட்டாளர்கள் இதே விஷயத்தைத் தான் புதிய வடிவத்தில் கூறுகிறார்கள். வரப்போகிற போரில், உலகப் பாட்டாளி வர்க்கமும் ஒடுக்கப்படும் தேசங்களும் சோவியத் சமூக ஏகாதிபத்தியத்துக்கு எதிராக அமெரிக்க ஏகாதிபத்தியத்தை ஆதரிக்க வேண்டும் என்பதுதான் இவர்களது அறைகூவல். உலகை மறுபங்கீடு செய்வதற்காக ஏகாதிபத்தியச் சக்திகளால் நடத்தப்படும் நியாயமற்ற போர்களில் பங்கேற்று, தனது சொந்த வர்க்க சகோதரர்களைப் படுகொலை செய்வதற்கு பாட்டாளி வர்க்கத்தை உடந்தையாக்குவதுதான் இரண்டாவது அகிலத்தின் புரட்டல் வாதக் கொள்கையாகும். இதே புரட்டல் வாதக் குப்பைதான் மூன்றுலகக் கோட்பாட்டாளர்களின் அய்க்கியமுன்னணிக்கொள்கையிலும்வெளிப்படுகிறது. முதல் உலகப் போர்க் கால கட்டத்தில் லெனினின் தலைமையிலிருந்த புரட்சிகரச் சக்திகளால் காட்ஸ்கி மற்றும் அவரது கூட்டாளிகளின் வஞ்சகத்தை அம்பலப்படுத்த முடிந்தது. மீண்டும், குருச்சேவும் அவனது கும்பலும் இதையே திரும்பச் செய்தபோது, மாசேதுங்காலும் சீ.பொ. கட்சியாலும் தலைமை தாங்கப்பட்ட உலக முழுவதிலுமிருந்த மார்க்சிய-லெனினியர்கள் அதை அம்பலப்படுத்தி முறியடித்தனர். இன்றும்கூட, அதே வஞ்சகத்தனத்தை, மூன்றுலகக் கோட்பாட்டாளர்கள் புதிய வடிவத்தில் திரும்பச் செய்து கொண்டிருக்கும்போது, உலகிலுள்ள மார்க்சிய-லெனின்யர்களால் அவர்களது நோக்கங்களை அம்பலப்படுத்தி முறியடிக்க நிச்சயமாக முடியும்.

மாசேதுங் சுட்டிக் காட்டினார்: ''உலகப் போர் என்ற பிரச்சனையைப் பொறுத்தவரை, இரு சாத்தியப்பாடுகள் நிலவுகின்றன. ஒன்று, போரானது புரட்சிக்கு வழி வகுக்கும்; இரண்டாவது, புரட்சியானது போரைத் தடுத்து நிறுத்தும்''. மேலும் அவர் சுட்டிக் காட்டியதாவது: ''புரட்சிதான்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இன்றைய உலகின் முதன்மையான போக்கு''. உலகப் போர் சம்பந்தமான இரண்டு சாத்தியப்பாடுகளிலும் **புரட்சி**தான் முதன்மைக் கூறாக உள்ளது. ஏனெனில், போரானது புரட்சிக்கு இட்டுச் செல்லப்பட வேண்டுமானால், அந்தந்த நாட்டிலுள்ள புரட்சிகரச் சக்திகள் உள் முரண்பாடுகளைச் சரியாகக் கையாண்டு புரட்சிக்கான நிலைமைகளைத் தயாரிக்கவேண்டும். புரட்சியானது போரைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்றால், இத்தயாரிப்புகள் மேலும் அதிகமாக முன்னோக்கிச் செல்ல வேண்டும். எந்த ஒரு சாத்தியப்பாட்டிலும், ஒவ்வொரு நாட்டிலும், வர்க்கப் போராட்டத்தைக் கூர்மைப்படுத்துவதன் மூலமாக மட்டுமே போரைப் புரட்சிக்கு இட்டுச் செல்லவோ அல்லது போரைத் தடுத்து நிறுத்த புரட்சியைச் செய்யவோ முடியும். எனவே, போர் 'என்ற பிரச்சனையைப் பொறுத்த வரை, முக்கியமான அம்சம், **ஒவ்வொரு நாட்டிலும் நடத்தப்பட வேண்டிய உள்நாட்டு வர்க்கப் போராட்டம்தான்.** 'மூன்றுலகக் கோட்பாடு' அரசுகளுக்கிடையே அய்க்கிய முன்னணி என்ற கருத்தை வைத்து வாதிடுவதன் மூலம் தூக்கியெறிந்துவிடுவது இந்த வர்க்கப் போராட்டத்தைத்தான்.

★

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்